
Since -1998
APPOLO STUDY CENTRE
TNPSC EXAMS
24 YEARS OF
EXCELLENCE
சுவடுகள்
(நடப்புக்கால நிகழ்வுகளின் தொகுப்பு)
தமிழ்நாடு
மாநிலங்கள்
தேசியம்
இந்தியா மற்றும் உலகம்
சர்வதேசம்
திட்டங்கள்
பாதுகாப்பு
அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
சுற்றுச்சூழல்
பொருளாதாரம்
நீதிமன்ற தீர்ப்புகள்
மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்
விருதுகள்
பிரபலமானவர்கள்
புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்
விளையாட்டுகள்
தரவரிசை மற்றும் அறிக்கைகள்
JANUARY
முக்கிய தினங்கள்
நினைவில் நின்றவர்கள்
DAILY NEWS
மாதத்தின் முக்கிய செய்திகள்
அறிவு
நியமனங்கள்
குழுக்கள்
செயலிகள் வலைதளங்கள்
விடுபட்டவை

# அன்றாட நடப்பு நிகழ்வுகள் - பிப்ரவரி 1-28, 2022


| வ.எண் | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலம் | 8 |
| 3 | தேசிய செய்திகள் | 10 |
| 4 | திட்டங்கள் | 17 |
| 5 | சர்வதேச செய்திகள் | 19 |
| 6 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 20 |
| 7 | மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 22 |
| 8 | பாதுகாப்பு | 24 |
| 9 | பொருளாதாரம் | 26 |
| 10 | நியமனங்கள் | 28 |
| 11 | விருதுகள் | 30 |
| 12 | புகழ்பெற்ற நபர்கள் | 31 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 32 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 33 |
| 16 | விளையாட்டுகள் | 38 |
| 17 | இரங்கல் செய்திகள் | 40 |
| 18 | அறிக்கைகள் | 41 |
| 19 | தரவரிசைப்பட்டியல் | 42 |
| 20 | முக்கிய தினங்கள் | 43 |

# தமிழ்நாடு

- **தடையற்ற சூழல் - 10 அரசு கட்டிடங்கள்**
  - அணுகக்கூடிய இந்தியா பிரச்சாரத்தின்கீழ் தடையற்ற சூழல் உருவாக்கப்படும் 10 மாநில அரசு கட்டிடங்களின் பட்டியலில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை அடங்கும்.
  - மாநில தலைநகரைப் பொறுத்தவரையில், அரசு அருங்காட்சியகம் மற்றும் வேளாண்மை இயக்குநரகம் ஆகியவை மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் தடையற்ற சூழலைக் கொண்டிருக்கும்.

- **தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல்**
  - 'தமிழை உலகுக்கு எடுத்துச் செல்லுதல்' என்ற திட்டத்தின்கீழ், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட சிலப்பதிகாரம் உள்ளிட்ட புத்தகங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட உள்ளார்.
  - 'தமிழை உலகுக்கு எடுத்துச் செல்லுதல்' என்பது தமிழ்நாட்டின் வளமான இலக்கிய வரலாறு மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் மற்றும் தனியார் பதிப்பகங்கள் இணைந்து செயல்படுத்தும் ஒரு திட்டம் ஆகும்.

- **மாநிலம் பெற்ற கடன் தொகை சுட்டிக் காட்டப்பட்டதைவிட குறைவு ஆகும்.**
  - 2022 நிதியாண்டின் நான்காவது காலாண்டில் மாநில வளர்ச்சிக் கடன்கள் எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன்மூலம் தமிழ்நாடு இதுவரை 4,400 கோடி கடன்களை வாங்கியுள்ளது. இது, இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, ஜனவரி 4 முதல் பிப்ரவரி 1 வரை சுட்டிக்காட்டப்பட்ட 9,000 கோடி கடனைவிடக் குறைவு ஆகும்.

- **அரண்**
  - புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் - பள்ளிக் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் தங்களது படிப்பு மற்றும் மனநலம் பாதிக்கப்படும் பிரச்சினைகளைப் பற்றி மனம் திறந்து பேசுவதற்காக 'அரண்' என்ற ஒரு முயற்சியைத் தொடங்கியுள்ளது.
  - இந்த முயற்சியானது குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு அவர்களின் உரிமைகள், தேவைகள், பாதுகாப்பு, சட்ட உதவி, மனம் மற்றும் உடல் ஆரோக்கியம், பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆதரவை அணுக அவர்களுக்கு உதவுகிறது.

- **அக்குவா மேப் (AquaMAP)**
  - சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், இந்தியாவில் தண்ணீர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, 'அக்குவா மேப்' என்ற ஒரு புதிய துறைகளுக்கு இடையேயான மேலாண்மை மற்றும் கொள்கை மையத்தை நிறுவுகிறது.

- **நீட் மசோதா (NEET Bill)**
  - நீட் மசோதா இன்று மீண்டும் சட்டப் பேரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அது ஒரு வரலாற்று சாதனை ஆக ஆகும்.
  - தமிழகத்தில் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (நீட்) ரத்து செய்வதற்கான மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் ஏற்றுக் கொண்டால், செவ்வாய்க் கிழமை ஒரு வரலாறு உருவானதாகக் கருதப்படும்.

- ✓ மாநில ஆளுநர் ஆர்.என். ரவியால் திருப்பி அனுப்பப்பட்ட அதே வரைவு மசோதாவை, சட்டசபை மீண்டும் ஏற்றுக் கொள்வது, மாநில சட்டசபை வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

## ➢ மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (State Environment Impact Assessment Authority -SEIAA)

- ✓ மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், தூத்துக்குடியில் மரச்சாமான்கள் பூங்காவைத் தவிர, தொழிலாளர்களுக்கான முதல் தொழில்துறை வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ வல்லம் - வடகல் விரிவாக்கம் (பாகம் 2) இன் ஒரு பகுதியாக 353 ஏக்கர் நிலப்பரப்பில் வீட்டு வசதியுடன் தொழில் பூங்கா அமைக்கப்படும்.
- ✓ தமிழ்நாடு மாநில தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் தொழில்துறை வீட்டுவசதித் திட்டத்தை நிறைவேற்றும்.

## ➢ இந்திய தொழில்நுட்பக் கழகம் (Indian Institute of Technology)

சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் - உயிர்ப் பொருளை வாயு எரிபொருளாக மாற்றுவதில் ஈடுபட்டுள்ள செயல்முறைகளைப் படிப்பதற்காக செயற்கை நுண்ணறிவு கருவியை உருவாக்கியுள்ளனர்.

லிங்கோ-செல்லுலோசிக் பயோமாசை ஆற்றல்-அடர்த்தியான சின்காஸாக (பயோமாசின் வாயுவாக்கம்) மாற்றும்போது ஏற்படும் எதிர்வினைகளை ஆய்வு செய்ய, ஆராய்ச்சிக் குழு. ரிகரண்ட் நியூரல் நெட்வொர்க்ஸ் (Recurrent Neural Networks) எனப்படும் இந்தியரக் கற்றல் முறையைப் பயன்படுத்தியது.

## ➢ திருக்குறள் கருப்பொருள் காலண்டர்கள்

- ✓ மாநில தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ் மெய்நிகர் அகாடமியின் திருக்குறள் கருப்பொருள் டெஸ்க்டாப் காலண்டர்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.
- ✓ குழந்தைகளால் வரையப்பட்ட 365திருக்குறள் கருப்பொருள் ஓவியங்களைக் கொண்ட டெஸ்க்டாப் நாட்காட்டியை மாதம் மற்றும் தேதிகளுடன் எந்த ஆண்டும் பயன்படுத்தலாம்.

## ➢ வறுமைக் குறைப்பில் தமிழ்நாட்டின் வெற்றி

- ✓ ஒன்றிய அரசின் கொள்கை சிந்தனைக் குழுவாகிய நிதி ஆயோகின் மூன்று பதிப்புகளும் நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் ஒரு பொதுவான அம்சத்தைக் கொண்டுள்ளது - இலக்கு -1 'வறுமை இல்லாமை' இல் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

## ➢ கீழடி – அகழ்வாராய்ச்சியின் எட்டாவது பகுதி

- ✓ சிவகங்கை மாவட்டம் கீழடியில் அகழ்வாராய்ச்சியின் எட்டாம் பாகத்தை பிப்ரவரி 11ஆம் தேதி தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னை அரசு தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.
- ✓ மேலும், மூன்றாம் பாகத்தை தூத்துக்குடி மாவட்டம் சிவகலையிலும், முதல் அகழ்வாய்வை விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டையிலும், தர்மபுரி மாவட்டம் பெரும்பாலையிலும், திருநெல்வேலியில் துலுக்கர் பட்டியிலும் முதல்வர் தொடங்கி வைத்தார்.

- ✓ இந்த நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் இரண்டாம் கட்ட அகழாய்வு பணிகளும் தொடங்கப்பட்டன.
- ✓ கீழடியில் அகழ்வாராய்ச்சியின் எட்டாவது பகுதி மற்றும் கொந்தகை, மணலூர் மற்றும் அகரம் ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வாய்வுப் பணிகள் செங்கல் கட்டுமானங்களின் முந்தைய கண்டுபிடிப்புகளை முன்னெடுத்துச் செல்லும்.

➢ **இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை (ஐஐடி, மெட்ராஸ்)**

- ✓ பிப்ரவரி 11 அன்று, இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை பிரவர்த்தக் தொழில்நுட்ப அறக்கட்டளை – ஆஷா ∴பார் எஜுகேஷன் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரண்டு கிராமப்புற தொழில்நுட்ப மையங்களைத் தொடங்க உள்ளது.
- ✓ இந்தக் கூட்டாண்மையின்கீழ், திருவள்ளூர் மாவட்டத்தில் கனகம்மாசத்திரம் மற்றும் சீத்தஞ்சேரி கிராமங்களில் இரண்டு ஆஷா – ஐஐடி மெட்ராஸ் பிரவர்த்தக் கிராமப்புற தொழில்நுட்ப மையங்கள் திறக்கப்பட்டன.
- ✓ 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் இந்த மையங்களுக்கு ஐஐடி மெட்ராஸ் பிரவர்த்தக் தொழில்நுட்ப அறக்கட்டளைமூலம் நிதியளிக்கப்படுகிறது.

➢ **பசுமை முறை (Green Methodology)**

- ✓ ஒரு பசுமை முறையை உருவாக்கியதற்காக, பெண் விஞ்ஞானிக்கு காப்புரிமை வழங்கப்பட்டது.
- ✓ சென்னை. இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி டாக்டர். இ. பூங்குழலி, பென்சோ(பி)தியோபீன் என்ற மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சேர்மத்தை தயாரித்ததற்காக பசுமை முறையை உருவாக்குவதற்கான காப்புரிமையைப் பெற்றுள்ளார்.

➢ **சர்வதேச கால்-கை வலிப்பு தினம் (International Epilepsy Day)**

- ✓ மாநிலத்தில் சுமார் 3.94 இலட்சம் பேர் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ சர்வதேச வலிப்பு தினத்தை முன்னிட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திங்கட்கிழமை நடைபெற்றது.

➢ **உள்நாட்டு சதுப்புநில ஆய்வு (Inland Wetland Survey)**

- ✓ உள்நாட்டு சதுப்புநில ஆய்வில், திருநெல்வேலியில் 41 இனங்களைச் சேர்ந்த 33,000 பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ✓ கடலோர சதுப்பு நிலங்களுக்குப் பிறகு, தமிழ்நாட்டில் 25 மாவட்டங்களில் இருந்து 339 சதுப்பு நிலங்களை உள்ளடக்கிய உள்நாட்டு சதுப்பு நிலங்களுக்கான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- ✓ இது வேடந்தாங்கல் போன்ற வரலாற்று நீர்ப்பறவை சரணாலயம் உட்பட 14 உள்நாட்டு நீர்ப்பறவை சரணாலயங்களை உள்ளடக்கியது.
- ✓ சேலத்தில் 97 உள்நாட்டு சதுப்பு நிலங்கள் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக 28 சதுப்பு நிலங்களுடன் சென்னை இரண்டாவது இடத்தில் உள்ளது.

➢ **தமிழ்நாடு பத்திரிகை கவுன்சில்**

✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - பிரத்யேக ஊடக அமைப்பான தமிழ்நாடு பத்திரிகை கவுன்சில் அமைப்பதற்கான சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

✓ தமிழ்நாடு பத்திரிகை கவுன்சில் அமைப்பதற்கான செயல்முறைக்கு தகுதிவாய்ந்த அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் பெறும் நடைமுறை விரைவில் முடிவடையும்.

✓ திருத்தப்பட்ட தமிழ்நாடு மாநில செய்தி ஊடக பிரதிநிதி அங்கீகார விதிகள், 2021, பின்னர் அரசு ஆணையாக வெளியிடப்படும்.

➢ **தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கம்**

✓ தமிழ்நாடு அரசு – மாநிலத்தில் உள்ள சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த 13 சாத்தியமான சதுப்பு நிலங்களை ராம்சார் தளமாக அறிவிக்க ஒன்றிய அரசுக்கு ஒரு முன்மொழிவை அனுப்பியுள்ளது.

✓ உள்ளூர் சமூகங்களுக்கு அதிக வாழ்வாதார வர்ய்ப்புகளை உருவாக்குவதற்காக சதுப்பு நிலங்களை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் ஒரே நோக்கத்துடன், 'தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கத்தின்' ஒரு பகுதியாக இந்த முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

✓ ஐந்து ஆண்டுகளில் 100 சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பதற்காக தமிழ்நாடு சதுப்பு நிலங்கள் இயக்கத்தை (Tamil Nadu Wetland Mission) ஆகஸ்ட் 2021 அன்று மாநில அரசு தொடங்கி வைத்துள்ளது.

➢ **இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) , சென்னை**

✓ சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அதிர்ச்சியைக் குறைக்கக் கூடிய ஓரிகேமி மெட்டா மெட்டீரியல்களின் சிறப்பு வகுப்பை உருவாக்கியுள்ளனர். மன அழுத்தத்திற்கு ஆளாகும்போது அது பாய்சன் விகிதத்தின் நிலையான மதிப்பைக் (constant value of Poisson's Ratio) கொண்டுள்ளது.

✓ ஓரிகமி மெட்டா மெட்டீரியல்களின் இந்த சிறப்பு வகுப்பானது ஜப்பானிக் கலையான காகித மடிப்பு (ஓரிகமி) மற்றும் தற்போதுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

➢ **தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

✓ சமீபத்தில் மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவராக ஏ.எஸ். குமாரி நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் ஏழு புதிய உறுப்பினர்கள் உள்ளனர்.

➢ **உ.வே. சாமிநாத ஐயரின் 167வது பிறந்த நாள் : பிப்ரவரி 19**

✓ இவர் தமிழ் கலாச்சாரம் மற்றும் மொழிக்கான அவரது பங்களிப்புகளுக்காக போற்றப்பட்ட ஒரு புகழ்பெற்ற தமிழ் அறிஞர் ஆவார். அவர் சங்க காலத்திலிருந்து படைப்புகளைப் பிரபலப்படுத்தினார் மற்றும் மதிப்புமிக்க பாரம்பரியத்தைப் பாதுகாக்க உதவினார்.

✓ சாமிநாத அய்யர் தனது வாழ்நாளில் செம்மொழியான தமிழ் இலக்கியம் தொடர்பான பல்வேறு விஷயங்களில் 90 புத்தகங்களை வெளியிட்டார். மேலும் 3,000 காகித கையெழுத்துப் பிரதிகள், பனை ஓலை கையெழுத்துப் பிரிதிகள் மற்றும் பல்வேறு வகையான குறிப்புகளைச் சேகரித்தார்.

- **பெருங்கடல்கள் 2022**
  - ✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் சென்னையின் ஆராய்ச்சி பூங்கா மற்றும் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து, இந்தியாவில் முதல் முறையாக, உலக கடல் ஆராய்ச்சியாளர்களின் இரு வருட நிகழ்வான பெருங்கடல்கள் 2022 (OCEANS 2022) மாநாட்டை நடத்துகின்றன.
  - ✓ இன்ஸ்டிடியூஷன் ஆப் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் ஓஷன் இன்ஜினியரிங் சொசைட்டி மற்றும் மரைன் டெக்னாலஜி சொசைட்டி சார்பில் பெருங்கடல்கள் பொறியியல் துறை இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறது.

- **ஆம்புலன்ஸ் திட்டத்திற்கு 188 வாகனங்கள்**
  - ✓ செங்கல்பட்டு மாவட்டம் சிட்லப்பாக்கத்தில் புதன்கிழமை அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 188 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
  - ✓ மேலும், ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் 50 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவப் பெட்டியையும் அவர் வழங்கினார். மேலும், இத்திட்டத்தின்கீழ் நோயாளிக்கு அளிக்கப்படும் இயன்முறை மருத்துவ (பிசியோதெரபி) சிகிச்சையையும் பார்வையிட்டார்.
  - ✓ புதியதாக அமைக்கப்பட்டுள்ள 188 ஆம்புலன்ஸ்களில் நான்கு வாகனங்கள் உதகமண்டலம், வால்பாறை, அரசூர் (பொள்ளாச்சி), மொட்டம்பட்டி (கள்ளக்குறிச்சி) ஆகிய பகுதிகளில் உள்ள மலைப் பகுதி மக்களுக்கு சேவை செய்வதற்காக ஒதுக்கப்படும்.

- **பன்ருட்டி முந்திரிக்கு புவிசார் குறியீடு**
  - ✓ தமிழ்நாடு முந்திரி பதப்படுத்துபவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம் பன்ருட்டி முந்திரிக்கு புவிசார் குறியீடு கோரி விண்ணப்பித்துள்ளது.
  - ✓ பன்ருட்டி முந்திரி முக்கியமாக செம்புரை மண், சிவப்பு மற்றும் கடற்கரை மணலில் பயிரிடப்படுகிறது.

- **வடக்குப்பத்து**
  - ✓ இந்திய தொல்லியல் துறை – காஞ்சிபரம் மாவட்டம் ஒரகடம் அருகே வடக்குப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள ஒரு இடத்தை 2022 ஏப்ரல் முதல் அகழாய்வு செய்யத் தொடங்கும்.
  - ✓ சென்னைக்குத் தெற்கே சுமார் 75 கிமீ தொலைவில் அமைந்துள்ள இந்த இடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பானை ஓடுகள் மற்றும் கல் கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

- **டான்சிம் (TANSIM)**
  - ✓ தமிழ்நாடு தொடக்கநிலை மற்றும் புதுமை இயக்கம் (Tamil Nadu Startup and Innovation Mission - TANSIM) மாநிலத்தில், ஆரம்பநிலையில் உள்ள தொடக்கநிலை நிறுவனங்களுக்கு மூலதனத் தொகையை வழங்கி ஆதரவு அளிப்பதற்காக – டான்சீட் (Tamil Nadu Startup Seed Grant Fund) இன் மூன்றாவது பதிப்பைத் தொடங்கி வைத்துள்ளது.
  - ✓ இந்த டான்சீட் திட்டத்தின்கீழ், தகுதியான தொடக்கநிலை நிறுவனங்களை ஒரு சிறந்த நடுவர் குழு கண்டறிந்து, அவர்களுக்கு ரூ.10 இலட்சம் மானிய நிதியுதவியை வழங்கும்.

# மாநிலம்

- **மகிழ்ச்சி**
  - ✓ மத்தியப் பிரதேச அரசு – தனது உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளின் பாடத்திட்டத்தில் அடுத்த கல்வி ஆண்டு முதல் ‘மகிழ்ச்சியை’ ஒரு பாடமாக அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.
  - ✓ இது அறிமுகப்படுத்தப்பட்டவுடன், பள்ளிகளில் இந்தப் பாடம் அறிமுகப்படுத்தப்படும் நாட்டிலேயே முதல் மாநிலமாக இந்த மாநிலம் இருக்கப் போகிறது.

- **தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு (National Single Window System)**
  - ✓ ஜம்மு காஷ்மீர் - தேசிய ஒற்றைச் சாரள அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட முதல் யூனியன் பிரதேசம் ஆனது.
  - ✓ இந்திய அரசின் 2020ஆம் ஆண்டின் பட்ஜெட் அறிவிப்புத் திட்டமாகிய தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு, திட்டங்களுக்கான அரசு அனுமதிகளைப் பெற முதலீட்டாளர்களுக்கு ஆதரவை வழங்கும் டிஜிட்டல் தளமாகும்.

- **இந்தியாவின் முதல் புல்லட் ரயில் நிலையம்**
  - ✓ சூரத்தில் உள்ள இந்தியாவின் முதல் புல்லட் ரயில் நிலையத்தின் முதல் காட்சிகள் இறுதியாக வெளியாகியுள்ளன. பிப்ரவரி 10 அன்று ரயில்வே அமைச்சகம், மும்பை – அகமதாபாத் இடையே கட்டப்படவுள்ள சூரத்தின் புல்லட் ரயில் நிலையத்தின் வரைபட மாதிரியை பகிர்ந்து கொண்டுள்ளது.
  - ✓ தேசிய அதிவேக ரயில் கார்ப்பரேஷன் லிட், இந்தத் திட்டத்தை நிர்மாணிக்கும். இதை டிசம்பர் 2024க்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- **மேடாரம் ஜாதரா (Medaram Jatara)**

  நாட்டிலேயே மிகப்பெரிய பழங்குடியினரின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சங்கமமாகிய மேடாரம் ஜாதரா – தெலுங்கானாவில் பிப்ரவரி 16ஆம் தேதி தொடங்குகிறது.

  கும்பமேளாவுக்குப் பிறகு இந்தியாவில் நடைபெறும் இரண்டாவது பெரிய திருவிழாவாக மேடாரம் ஜதாரா விளங்குகிறது.

  தெலுங்கானாவின் இரண்டாவது பெரிய பழங்குடி சமூகமான கோயா பழங்குடியினரால் இது கொண்டாடப்படுகிறது. கோயா பழங்குடியினர் தெலுங்கானாவின் மிகப்பெரிய ஆதிவாசி பழங்குடியினர் ஆவர்.

- **ஸ்மார்ட் கார்டு ஆயுத உரிமம் (Smart Card Arms License)**
  - ✓ ‘ஸ்மார்ட் கார்டு ஆயுத உரிமத்தை’ முதன்முதலில் அறிமுகப்படுத்தியது டெல்லி காவல் துறை ஆகும்.
  - ✓ டெல்லியின் குடிமக்களுக்கு தொழில்நுட்பத்திற்கு ஏற்ற டிஜிட்டல் சேவைகளை வழங்குவதற்காக, ‘ஸ்மார்ட் கார்டு ஆயுத உரிமத்தை’ அறிமுகப்படுத்திய நாட்டின் முதலாவது காவல் படை என்ற பெருமையை டெல்லி காவல்துறை பெற்றுள்ளது.

- **ஆசியாவின் மிகப்பெரிய பயோ – சிஎன்ஜி ஆலை**
  - ✓ 19 பிப்ரவரி 2022 அன்று மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில் ஆசியாவின் மிகப்பெரிய பயோ-சிஎன்ஜி ஆலையை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.
  - ✓ இந்த பயோ சிஎன்ஜி ஆலை 100 விழுக்காடு ஈரக் கழிவுகளில் இருந்து இயக்கப்படும். இந்த ஆலை அரசு தனியார் பங்களிப்பு (PPP mode) முறையில் கட்டப்பட்டுள்ளது.

பயோ-சிஎன்ஜி ஆலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் எரிவாயு மூலம் தினமும் 400 பேருந்துகளை இயக்க முடியும்.

- **ஷாஹித் திவாஸ் (Shahid Diwas)**

✓ பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் - பிப்ரவரி 15 இனிமேல் மாநிலத்தில் 'ஷாஹித் திவாஸ்' என்று நினைவுகூறப்படும் என்று கூறினார்.

✓ பிப்ரவரி 15, 1932 அன்று பீகாரின் முங்கர் மாவட்டத்தில் உள்ள தாராபூர் நகரில் காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 34 சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவாக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

✓ 1919ஆம் ஆண்டு அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்ற படுகொலைக்குப் பிறகு பிரிட்டிஷ் காவல்துறை நடத்திய மிகப்பெரிய படுகொலை தாராபூர் படுகொலையாகும்.

- **இந்தியாவின் முதல் இரவு வழிசெலுத்துதல் கைபேசி செயலி – நதிகளில்**

✓ அசாம் மாநிலத்தின் கவுகாத்தியில் உள்ள பிரம்மபுத்திரா நதியில் படகு சேவைகளுக்கான இந்தியாவின் முதலாவது இரவு வழி செலுத்துதல் கைபேசி செயலியை அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வ சர்மா அறிமுகப்படுத்தினார்.

✓ இரவு வழிசெலுத்துதல் கைபேசி செயலியானது ஐஐடி சென்னையின் முதன்மை விஞ்ஞானி கே. ராஜுவுடன் இணைந்து போக்குவரத்துத் துறையால் உருவாக்கப்பட்டது. இது நதிகளின் வரைவுகளை ஆய்வு செய்யும்.

✓ கௌஹாத்தி மற்றும் வடக்கு கௌஹாத்திக்கு இடையேயான உள்நாட்டு நீர்வழிப் படகுப் போக்குவரத்தின் (Inland Water Transport) முதல் இரவுப் பயணம் 19 பிப்ரவரி 2022 அன்று தொடங்கப்பட்டது.

# தேசிய செய்திகள்

➢ **இந்தியாவின் முதல் புவியியல் பூங்கா (India's First Geological Park)**

✓ நாட்டின் முதலாவது 'புவியியல் பூங்கா' மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூர் மாவட்டத்தில் நர்மதா நதிக்கரையில் உள்ள லாம்ஹெட்டா கிராமத்தில் கட்டப்படும்.

✓ இந்தப் பூங்காவிற்கு சுரங்க அமைச்சகத்தின்கீழ் இந்திய புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது.

✓ குறிப்பிடத்தக்க வகையில், இந்த தளம் ஏற்கனவே யுனெஸ்கோவின் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான புவிசார் பாரம்பரியத்தின் தற்காலிக பட்டியலில் உள்ளது.

➢ **ஒன்றிய அரசின் பட்ஜெட் (Union Budget)**

✓ ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1, 2022 அன்று மத்திய பட்ஜெட் 2022-2023ஐ தாக்கல் செய்தார்.

✓ டிஜிட்டல் சொத்துக்களை விற்பனை செய்வதன்மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு நாட்டிலேயே அதிக வரியான 30 விழுக்காடு வரி விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

✓ 2022-23 முதல் ரிசர்வ் வங்கியால் பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் ரூபாய் வழங்கப்படும்.

➢ **பட்ஜெட் - மின்-கடவுச்சீட்டுகள் (e-Passports)**

✓ 2022-23 நிதியாண்டில் ஒன்றிய அரசு மின் கடவுச்சீட்டுகளை வழங்கும்.

✓ இந்தக் கடவுச்சீட்டில் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு மின் பாஸ்போர்ட் ரேடியோ அதிர்வெண் அடையாளம் (Radio-Frequency Identification) மற்றும் பயோ மெட்ரிக்ஸ் பயன்படுத்தப்படும்.

✓ **பட்ஜெட் 2022-23**

✓ ஒன்றிய அரசு தேசிய தொலை மனநல மருத்துவத் திட்டத்தைத் (National Tele Mental Health) தொடங்கி வைக்கஉள்ளது.

✓ சாதனை அளவாக 25,000 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படும்.

✓ மக்கள் மற்றும் சரக்குகளின் விரைவான இயக்கத்தை எளிதாக்குவதற்காக, 2022-23ல் விரைவுச் சாலைகள் குறித்த தேசிய மாஸ்டர் பிளான் வகுக்கப்படும்.

✓ ஆத்மநிர்பர் பாரதத்தை மேம்படுத்துவதற்காக பாதுகாப்புக்கான மூலதனக் கொள்முதல் பட்ஜெட்டில் சுமார் 68 விழுக்காடு உள்நாட்டு தொழில்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

➢ **ஒன்றிய பட்ஜெட் 2022-23**

✓ பிபர்வரி 1 ஆம் தேதி, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் - 2022-23ஆம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார் மற்றும் நிதி மசோதா 2022ஐ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

✓ மத்திய பட்ஜெட் வளர்ச்சியின் 4 தூண்களில் கவனம் செலுத்துகிறது – பிரதமர் கதி சக்தி, முதலீட்டு நிதி, உற்பத்தி மேம்பாடு, ஆற்றல் மாற்றம் மற்றும் காலநிலை நடவடிக்கை.

✓ நிதியமைச்சர் தனது உரையில், 'அம்ரித் கால்'க்கு அடித்தளம் அமைப்பதாக அறிவித்தார். இது 100ஐ நோக்கிய இந்தியாவின் பயணத்தில் புதிய 25 ஆண்டு காலம் ஆகும்.

- **தூய்மை சார்த்தி உதவித் தொகை (SwachhtaSaarthi Fellowship) 2022**
- ✓ இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரின் அலுவலகம் 'தூய்மை சார்த்தி உதவித் தொகை 2022'ஐ அறிவித்துள்ளது.
- ✓ 'கழிவிலிருந்து செல்வம்' என்ற திட்டத்தின்கீழ் இது தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ கழிவு மேலாண்மை, கழிவு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபடும் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு இது தூய்மை சார்த்திகளாக அதிகாரம் அளிக்கும் மற்றும் பசுமையான கிரகத்திற்கான கழிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்தும்.

- **சாகர்மாலா திட்டம் (Sagarmala Scheme)**
- ஒன்றிய அரசு – சாகர்மாலா திட்டத்தின்கீழ் 304.8 கோடி ரூபாய் செலவில் புதுச்சேரி துறைமுகத்தை மூன்று கட்டங்களாக மேம்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்தத் துறைமுகம் சென்னைத் துறைமுகத்திற்கு ஒரு ஃபீடர் துறைமுகமாக விளங்கும்.
- ஒன்றிய அமைச்சரின் கூற்றுப்படி, புதுச்சேரியில் உள்ள துறைமுகத்தை சென்னை துறைமுகத்திற்கு ஃபீடர் துறைமுகமாகப் பயன்படுத்துவதற்கு ஒன்றிய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒப்புதலுடன், சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் புதுச்சேரி துறைமுகத்துறை மார்ச் 2017இல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- **இதர பயனுள்ள பகுதி அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள் (Other Effective Area-Based Conservation Measures)**
- ✓ அரியானாவின் குருகிராமில் உள்ள ஆரவல்லி பல்லுயிர் பூங்கா - இந்தியாவின் முதல் 'மற்ற பயனுள்ள பகுதி அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள்' தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ பிப்ரவரி 2ஆம் தேதி உலக சதுப்பு நில தினத்தையொட்டி ஒன்றிய சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் இதனைத் தெரிவித்துள்ளது.

- **சமத்துவ சிலை (Statue Of Equality)**
- ✓ ஐதராபாத்தில் 11ஆம் நூற்றாண்டின் பக்தித் துறவி ஸ்ரீராமானுஜாச்சாரியாரின் நினைவாக 216 அடி உயர 'சமத்துவ சிலையை' பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

- **இந்திர தனுஷ் 4.0 (Indradhanush)**
- ✓ பிபர்வரி 7 ஆம் தேதி, ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா – தீவிரப்படுத்தப்பட்ட இந்திர தனுஷ் 4.0 இயக்கத்தை மெய்நிகராகத் தொடங்கி வைத்தார்.
- ✓ அனைவருக்கும் தடுப்பூசித் திட்டத்தின் (Universal Immunisation Programme) நான்காவது சுற்று குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை உயிருக்கு ஆபத்தான நோய்களிலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ உலகின் மிகப்பெரிய இந்தத் தடுப்பூசி இயக்கத்தின்கீழ், ஆண்டுதோறும் 3 கோடி கர்ப்பிணிப் பெண்களும், 2.6 கோடி குழந்தைகளும் சேவை பெறுகின்றனர்.

## ➢ ஆபரேஷன் AAHT

- ✓ ஆளகடத்தலைத் தடுப்பதற்கு இரயில்வே பாதுகாப்புப் படை நாடு முழுவதும் நடவடிக்கை எடுத்துள்ளது. ‘ஆபரேஷன் ஏஏஎச்டி திட்டத்தின் ஒரு பகுதியாக, கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை மீட்பதில் கவனம் செலுத்தி அனைத்து நீண்ட தூர இரயில்கள் - வழித்த தடங்களிலும் சிறப்புக் குழுக்கள் நிறுத்தப்படும்.
- ✓ நாள்தோறும் நாடு முழுவதும் சுமார் 21,000 இரயில்களை இயக்கும் இரயில்வே துறையானது, பாதிக்கப்பட்டவர்களை நீண்ட தூர இரயில்களில் கொண்டு செல்வதற்கு கடத்தல்காரர்களுக்கு மிகவும் நம்பகமான போக்குவரத்து முறையாகும்.

## ➢ நைட்ரிக் ஆக்சைடு நாசி ஸ்ப்ரே (Nitric Oxide Nasal Spray)

- ✓ பிப்ரவரி 9 அன்று, க்ளென்மார்க் பார்மசூட்டிகல்ஸ் நிறுவனம், கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள வயது வந்த நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக இந்தியாவில் முதல் நாசி ஸ்ப்ரேயை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ அதிக ஆபத்துள்ள நோயாளிகளில் தடுப்பூசி போடாத நோயாளிகள், நடுத்தர மற்றும் வயதான நோயாளிகள் மற்றும் இணை நோயுற்ற நோயாளிகள் அடங்குவர்.
- ✓ இந்த நிறுவனம், கனடிய மருந்து நிறுவனமான சானோடைஸ் ரிசர்ச் மற்றும் அபிவிருத்திக் கழகம் உடன் இணைந்து ஃபேபிஸ்ப்ரே என பெயரிடப்பட்ட நைட்ரிக் ஆக்சைடு நாசல் ஸ்ப்ரேயை அறிமுகப்படுத்தியுள்ளது.

## ➢ பயோமாஸ் அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை

- ✓ இந்தியாவின் முதல் வணிக அளவிலான பயோமாஸ் அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை மத்தியப் பிரதேசத்தின் கந்த்வா மாவட்டத்தில் அமைக்கப்படும்.
- ✓ இந்த ஆலை தினமும் ஒரு டன் ஹைட்ரஜனை, 30 டன் உயிர்த் தீவனத்தில் இருந்து உற்பத்தி செய்யும்.

## ➢ இந்திய இரயில்வே மேலாண்மை சேவை (Indian Railways Management Service)

- ✓ பிப்ரவரி 9 அன்று, மத்திய சிவில் சேவைகளின் கீழ் இந்திய ரயில்வே தொடர்பான எட்டு சேவைகளை, புதிதாக உருவாக்கப்பட்ட குரூப் ‘ஏ’ ஒன்றிய சேவையான ‘இந்திய இரயில்வே மேலாண்மை சேவையில் ஒன்றிணைத்து ஒன்றிய அரசு ஆணையிட்டுள்ளது.
- ✓ இந்த ஒன்றிணைத்தல் மூலம், இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் மருத்துவ சேவைத் துறை ஆகிய இரண்டு துறைகள் மட்டுமே இரயில்வேயிடம் உள்ளன.

## ➢ புதுமையான சுகாதார வழங்கலுக்கான சந்தைகள் மற்றும் வளங்களுக்கான நிலையான அணுகல் (Sustainable Access to Markets and Resources for Innovative Delivery of Healthcare -SAMRIDH)

- ✓ அடல் புதுமை இயக்கம், நித்தி ஆயோக் மற்றும் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க முகமை – புத்தாக்கமான சுகாதாரப் பாதுகாப்புக்கான முயற்சிக்கான சந்தைகள் மற்றும் வளங்களுக்கான நிலையான அணுகலின்கீழ் ஒரு புதிய கூட்டாண்மையை அறிவித்தது.
- ✓ அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 நகரங்கள் மற்றும் கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு மலிவுவிலை மற்றும் தரமான சுகாதாரத்திற்கான அணுகலை மேம்படுத்துவதற்காக இந்த இணைப்பு முயல்கிறது.

## ➢ PMKSY மார்ச் 2026 வரை

- ✓ பிரதமரின் கிசான் சம்படா யோஜனா திட்டம் மார்ச் 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டம் ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
- ✓ இந்தத் திட்டம் உணவு பதப்படுத்தும் துறையின் ஒட்டு மொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ 100வது ஜவுளி இரயில்

- ✓ மேற்கு இரயில்வே மண்டலத்தின் மும்பை மத்திய பிரிவு – நாட்டின் 100வது ஜவுளி இரயிலை இயக்கும் மைல்கல் சாதனையை எட்டியுள்ளது.
- ✓ சூரத் பிராந்தியத்தின் ஜவுளி சந்தைக்கு ஜவுளி இரயில்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை, ஏனெனில் அவை சிக்கனமான, வேகமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து முறையாகும்.

## ➢ தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 69(ஏ)

- ✓ பிப்ரவரி 14 அன்று, தனியுரிமை, பாதுகாப்பு மற்றும் உளவு தொடர்பான கவலைகள் காரணமாக தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 69(ஏ) பிரிவின்கீழ் 54 சீனச் செயலிகளை ஒன்றிய அரசு தடை செய்துள்ளது.
- ✓ தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் அவசரச் சட்டத்தின்கீழ், இந்தச் செயலிகளைத் தடுப்பதற்கான கோரிக்கை உள்துறை அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்டது.

## ➢ புதிய எல்லைகள் திட்டம்

- ✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், 'பதிய எல்லைகள்' திட்டத்தை நடத்துகிறது.
- ✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் 'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின்' ஒரு பகுதியாக 'புதிய எல்லைகள்' என்ற ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பற்றிய ஒரு திட்டத்தை நடத்தி வருகிறது.
- ✓ 2070க்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை அடைவதற்கான சாலை வரைபடம் குறித்த கூட்டம், பிப்ரவரி 18 அன்று நடைபெறும்.

## ➢ அனைத்து கிராமங்களின் டிஜிட்டல் வரைபடங்கள்

- ✓ இந்தியா தனது 6,00,000 கிராமங்களின் டிஜிட்டல் வரைபடங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. 100 நகரங்களுக்கு பான்-இந்தியா முப்பரிமான வரைபடங்களும் தயாரிக்கப்படும்.
- ✓ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் முன்னோடியாகச் செயல்படுத்தப்படும், கிராமங்களில் கணக்கெடுப்பு மற்றும் கிராமப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் மேப்பிங் (Survey of Villages and Mapping with Improvised Technology in Village Areas) SVAMITVA என்று அழைக்கப்படும் திட்டம் ஏப்ரல் 2020 இல் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.

## ➢ தேசிய ஹைட்ரஜன் கொள்கை

- ✓ இந்தியா தேசிய ஹைட்ரஜன் கொள்கையின் முதல் பகுதியை 17 பிப்ரவரி 2022 அன்று தொடங்கும்.
- ✓ இந்தக் கொள்கையானது, நாட்டில் பச்சை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **ஒன்றிணைந்த தளவாட இடைமுக பிளாட்பார்ம் (Unified Logistics Interface Platform)**
- ✓ ஒன்றிய அரசு – தளவாடச் செலவுகளைக் கடுமையாகக் குறைப்பதற்கும் இந்தியப் பொருட்களைப் போட்டித் தன்மையடைச் செய்வதற்காகவும் ஒன்றிணைந்த தளவாட இடைமுக பிளாட்பார்ம் ஐ விரைவில் வெளியிட உள்ளது.
- ✓ 6 அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் 24 தளவாட அமைப்புகளை ஒருங்கிணைத்து அனைத்து பங்குதாரர்களுக்கும் நிகழ்நேரத் தரவை வழங்கவும், வெவ்வேறு முறைகள் மூலம் சரக்குகளின் திறமையான இயக்கத்தை உறுதி செய்வதையும் இந்தத் தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **உயிரியல் பாதுகாப்பு நிலை 3 நடமாடும் ஆய்வகம் (Biosafety Level-3 Mobile Laboratory)**
- ✓ இந்தியாவின் முதல் உயிரியல் பாதுகாப்பு நிலை 3 கட்டுப்பாட்டு மொபைல் ஆய்வகம் 18 பிப்ரவரி 2022 அன்று மகாராஷ்டிராவின் நாசிக்கில் தொடங்கப்பட்டதாக சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ✓ மனிதர்களுக்கு மிகவும் தொற்றக்கூடிய மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தும் திறன் கொண்ட வைரஸ் தொற்றுகள் புதிதாக உருவாகியும் மீண்டும் உருவாகி வருவதையும் ஆய்வு செய்வதற்காக இது அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இதை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வடிவமைத்துள்ளது.

- **இந்தியாவின் முதலாவது வாட்டர் டாக்சி சேவை**
- ✓ இந்தியாவின் முதல் வாட்டர் டாக்சி சேவை, வியாழக்கிழமை அன்று நவி மும்பை பகுதியை மும்பையின் பிரதான நிலப் பகுதியுடன் இணைக்கும் வகையில் மகாராஷ்டிராவில் தொடங்கப்பட்டது.
- ✓ பெலாப்பூர் ஜெட்டியை முதலமைச்சர் உத்தவ் தாக்கரே திறந்து வைத்தார். ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்த் சோனோவால் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

- **கிசான் ட்ரோன்கள் (Kisan Drones)**
- பிப்ரவரி 18 அன்று, பிரதமர் நரேந்திர மோடி - இந்தியாவின் பல்வேறு மாநகரங்கள் மற்றும் நகரங்களில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் பண்ணை இரசாயனங்கள் தெளிப்பதற்கான 100 ‘கிசான் ட்ரோன்களை’ மெய்நிகராக கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- குர்கானுக்கு அருகிலுள்ள மனேசரில் கூடியிருந்த விவசாயிகள் குழுவிடம் அவர் உரையாற்றினார். அங்கு இருந்துதான், ‘ட்ரோன் கிசான் யாத்ரா’ கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்திய விவசாயத்திற்கு இது ஒரு ‘மைல்கல்’ என்று பிரதமர் குறிப்பிட்டார். புதிய தொழில்நுட்பங்கள் ‘விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் நிறைந்த உலகத்தைக்’ கொண்டு வரும் என்று அவர் தெரிவித்தார்.

- **ஆசியாவின் மிகப்பெரிய பயோ-சிஎன்ஜி ஆலை (Bio-CNG plant)**
- ✓ 19 பிப்ரவரி 2022 அன்று மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் ஆசியாவின் மிகப்பெரிய பயோ-சிஎன்ஜி ஆலையை பிரதமர் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

- ✓ அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு முழுவதிலும் உள்ள 75 பெரிய மாநகராட்சிகளில் இதேபோன்ற கோபர்தன் பயோ-சிஎன்ஜி ஆலைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருவதாக பிரதமர் கூறினார்.
- ✓ இந்தியாவின் நகரங்களை தூய்மையான, மாசு இல்லாத, சுத்தமான எரிசக்தி நகரங்களாக மாற்ற இந்தப் பிரச்சாரம் பெரிதும் உதவும்.

## ➢ ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து மேலாண்மை மசோதா

ஒன்றிய உரக அமைச்சகம் - உயிர் உரங்கள் மற்றும் ரசாயனம் அல்லாத உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க 'ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து மேலாண்மை மசோதாவை' கொண்டு வர முன் வந்துள்ளது.
முன்மொழியப்பட்ட இந்த மசோதாவில் உரங்களின் விலை, விநியோகம் மற்றும் இறக்குமதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஒழுங்குமுறை ஆணையத்தை அமைக்க அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.
இந்த வரைவு மசோதாவின்படி, உரத்தை விற்க வேண்டிய அதிகபட்ச விலையை ஒன்றிய அரசே நிர்ணயிக்கும்.

## ➢ இந்திய சுற்றுலா தொலைநோக்கு ஆவணம் 2035

- ✓ இந்திய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சங்கங்களின் கூட்டமைப்பு (Federation of Associations in Indian Tourism & Hospitality - FAITH) ∴பெய்த் 2035 தொலைநோக்கு ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- ✓ 2035ஆம் ஆண்டிற்குள் இந்திய சுற்றுலாவை உலகமே விரும்பி வரவேற்கக் கூடியதாக மாற்றுவதற்கான இலக்குகள் மற்றும் செயல்படுத்தும் பாதையை இது கொண்டுள்ளது.
- ✓ இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டை நினைவுகூறும் வகையில் தொலைநோக்கு ஆவணம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

## ➢ விக்யான் சர்வத்ர பூஜ்யதே திட்டம் (Vigyan Sarvatra Pujyate Programme)

- ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்வதற்காக மத்தியப் பிரதேசத்தில் உள்ள மூன்று நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- ✓ இது பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் மற்றும் விரிவுரைகளின் ஒரு வார கால, தேசிய அளவிலான திட்டமாகும்.
- ✓ விக்யான் சர்வத்ர பூஜ்யதே திட்டம், அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்கள் பற்றிய அறிவியல் அறிவை நோக்கி மாணவர்களை ஈர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

## ➢ வந்தே பாரதத்தின் சிக்னேச்சர் டியூன் (Signature Tune of VandeBharatam)

- ✓ ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின் கீழ் கொண்டாட்டத்தில், சர்வதேச தாய்மொழி தினமான 'ஏகம்பரதம்' என்ற பெயரில் ஒரு கலாச்சார மாலை நிகழ்வும், கலாச்சார மாலையும் 22 பிப்ரவரி 2022 அன்று டெல்லியில் உள்ள IGNCA வில் நடத்தப்பட்டது.
- ✓ கிராமி விருது பெற்ற ரிக்கி கேஜ் மற்றும் ஆஸ்கார் போட்டியாளர் பிக்ரம் கோஷ் இசையமைத்த 'வந்தேபாரதம்' சிக்னேச்சர் ட்யூனை கலாச்சாரம் மற்றும் வெளிவிவகார அமைச்சர் திருமதி மீனகாசிலேகி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- **வரைவு இந்திய தரவு அணுகல் மற்றும் பயன்பாட்டுக் கொள்கை, 2022 (Draft India Data Accessibility & Use Policy, 2022)**

✓ மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (The Ministry of Electronics and Information Technology) – பொது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களுக்காக. 'வரைவு இந்திய தரவு அணுகல் மற்றும் பயன்பாட்டுக் கொள்கை, 2022' என்ற தலைப்பில் வரைவு தரவுக் கொள்கையை வெளியிட்டுள்ளது.

✓ இந்தக் கொள்கை தேசிய தரவு பகிர்வு மற்றும் அணுகல் கொள்கை மற்றும் திறந்த அரசாங்க தரவு தளம் இந்தியா ஆகியவற்றிற்கு மேம்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

- **ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் (Ayushman Bharat Digital Mission)**

✓ பிப்ரவரி 26 அன்று, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை – 1600 கோடி ஐந்தாண்டு பட்ஜெட்டில் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷனை நாடு முழுவதும் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது.

✓ 2022-23 யூனியன் பட்ஜெட்டின் முக்கிய பகுதிகளில் டிஜிட்டல் மிஷன் ஒன்றாகும்.

✓ சுகாதார சுற்றுச் சூழலுக்குள் சுகாதார தரவுகளின் இயங்குநிலையை செயல்படுத்த ஆன்லைன் தளத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **ஒளி மின்னழுத்த ஆலை (Photovoltaic Plant)**

✓ பாரத் ஹெவி எல்கட்ரிக்கல்ஸ் லிமிடெட் - இந்திய இரயில்வேக்காக மத்தியப் பிரதேசத்தில் உள்ள பினாவில் 1.7 மெகாவாட் சூரிய ஒளி மின்னழுத்த ஆலையை நிறுவியுள்ளது.

✓ இழுவை அமைப்புகளுக்கு மின்சாரத்தை நேரடியாக வழங்குவதற்காக இந்திய ரயில்வே நெர்வொர்க்கில் இயக்கப்பட்ட முதல் சூரிய மின்நிலையம் இதுவாகும்.

✓ 'நெட் ஜீரோ கார்பன் உமிழ்வு' ரயில் நெட்வொர்க்காக மாறுவதற்காக, இந்திய ரயில்வே தனது காலி நிலத்தைப் பயன்படுத்தி 2030க்குள் 20 ஜிகாவாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

- **ஆபரேஷன் கங்கா**

✓ பிப்ரவரி 27, 2022 அன்று, உக்ரைனில் இருந்து இந்திய பிரஜைகளை வெளியேற்றுவதற்கு உதவுவதற்காக வெளியுறவு அமைச்சகம் 24x7 கட்டுப்பாட்டு மையங்களை அமைத்தது.

✓ இந்தியா 'ஆபரேஷன் கங்கா' என்ற பெயரில் பலமுனை வெளியேற்றும் திட்டத்தைத் தொடங்கியது.

# திட்டங்கள்

## ➢ மிஷன் வாத்சல்யா (Mission Vatsalya)

- ✓ குழந்தைகளின் மறுவாழ்வுக்காக ஒன்றிய அரசு 'மிஷன் வாத்சல்யா' திட்டத்தைச் செயல்படுத்துகிறது.
- ✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், ஒன்றிய அரசு நிதியுதவியுடன் 'குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் - மிஷன் வாத்சல்யா' திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.
- ✓ இது அனாதையாக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் உட்பட கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளின் மறுவாழ்வுக்கானது ஆகும்.

## ➢ பர்வத்மாலா திட்டம் (Parvatmala Scheme)

- ✓ 2022-23ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டை வழங்கிய ஒன்றிய நிதியமைச்சர், மலைப்பாங்கான பகுதிகளில் இணைப்பை மேம்படுத்துவதற்காக தேசிய கயிற்றுப்பாதை மேம்பாட்டுத் திட்டம் - பர்வத்மாலா செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்.
- ✓ இதன் நோக்கம் சுற்றுலாவை மேம்படுத்துவதுடன், பயணிகளுக்கான இணைப்பு மற்றும் வசதியை மேம்படுத்துவதே ஆகும்.

## ➢ ஸ்மைல் (SMILE)

- ✓ சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை, 12 பிப்ரவரி 2022 அன்று, "SMILE: Support for Marginalised Individuals for Livelihood and Enterprise" (விளிம்பு நிலை மக்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் நிறுவனத்திற்கான ஆதரவு) என்ற திட்டத்தைத் தொடங்கி வைக்க உள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ் 2 துணைத் திட்டங்கள் உள்ளன - 'திருநங்கைகள் நலனுக்கான விரிவான மறுவாழ்வுக்கான ஒன்றிய அரசு திட்டம்' மற்றும் 'பிச்சையெடுக்கும் செயலில் ஈடுபடும் நபர்களின் மறுவாழ்வுக்கான ஒன்றிய அரசின் விரிவான திட்டம்' ஆகியவை.

## ➢ DNTகளின் பொருளாதார அதிகாரமளித்தலுக்கான திட்டம் (Scheme for Economic Empowerment)

- ✓ பிப்ரவரி 16 அன்று, சமூக நீதி மன்றும் அதிகாரமளித்தல் அமைச்சர், டாக்டர். வீரேந்திர குமார் - அறிவிக்கப்படாத, நாடோடி மற்றும் அரை நாடோடி சமூகங்களின் நலனுக்காக பொருளாதார அதிகாரமளித்தலுக்கான திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், சிவில் சர்வீசஸ் தேர்வுகள், தொழில்முறைப் படிப்புகளில் சேர்வதற்கான போட்டித் தேர்வுகளுக்காக மாணவர்களுக்கு இலவச பயிற்சி. மருத்துவ காப்பீடு, வாழ்வாதார ஆதரவு மற்றும் வீட்டு வசதி ஆகிய சேவைகளை அளிக்க அரசு முயல்கிறது.

## ➢ புதிய இந்தியா எழுத்தறிவு திட்டம்

- ✓ 2022-2027 காலத்திற்கான புதிய திட்டமாகிய, 'புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டத்திற்கு' ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ இது தேசிய கல்விக் கொள்கை 2020 மற்றும் பட்ஜெட் அறிவிப்புகள் 2021-22 அகியவற்றுக்கு இணைய, வயது வந்தோர் கல்வியின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும்.

- ✓ இந்தத் திட்டம், நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்கள் - யூனியன் பிரதேசங்களில் உள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாதவர்களுக்கு சேவை செய்யும்.

## ➢ ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் திட்டம் (RashtriyaUchchatar Shiksha Abhiyan Scheme)

- ✓ ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டமான, ராஷ்ட்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் திட்டம், மாநில அரசு பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு மார்ச் 31, 2026 வரை நிதியுதவி வழங்கும் வகையில் செயல்படுத்தப்படும்.
- ✓ இந்தத் திட்டம் சமபங்கு, அணுகல் மற்றும் சிறப்பை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ புதிய கட்டத்தின்கீழ், மாநில அரசுகள் தொழில் மயமாக்கல் மற்றும் திறன் மேம்பாடு மூலம், பாலின சேர்க்கை, சமபங்கு, முன் முயற்சிகள் போன்றவற்றை அடைய முடியும்.

## ➢ மகப்பேறு உதவித் திட்டம்

- ✓ முதல் குழந்தைக்கு 5,000 வழங்கும் மகப்பேறு உதவித் திட்டம், பெண் குழந்தையாக இருந்தால் மட்டுமே இரண்டாவது குழந்தைக்கும் வழங்கப்படும் என்ற அரசின் சமீபத்திய அறிவிப்பு - இதை பாரபட்சமின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டுமென்று ஆர்வலர்களிடமிருந்து கடுமையான விமர்சனங்களை எதிர் கொண்டுள்ளது.
- ✓ 2017இல் தொடங்கப்பட்ட பிரதமரின் மாத்ரு வந்தனா யோஜனா (Pradhan Mantri Matru Vandana Yojana) ஒரு பெண்ணின் ஊதிய இழப்பை ஓரளவு ஈடு செய்ய வேண்டும் என்பதற்காக முதல் குழந்தை பிறந்தால் ரூ.5000 வழங்குகிறது.
- ✓ இது தாய் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து நல்வாழ்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதைக் கொண்டு, இந்தத் தொகையானது மூன்று தவணைகளில் வழங்கப்படுகிறது. இது, மற்றொரு திட்டமான ஜனனி சுரக்ஷா யோஜனாவுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவமனையில் குழந்தை பிறந்தால் ரூ.1000 வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஒரு பெண் மொத்தம் ரூ.6000 பெறுகிறார்.

## ➢ என் கொள்கை, என் கைகள் (Meri Policy, Mere Haath)

- ✓ பயிர்க் காப்பீட்டுப் பலன்களை நேரடியாக விவசாயிகளின் இல்லங்களிலேயே கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்பதற்காக ஒன்றிய அரசு, என் கொள்கை, என் கைகள் என்ற ஒரு திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளது.
- ✓ தங்களது பாலிசிகள், நிலப்பதிவுகள், பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உரிமை கோரல் செயல்முறை மற்றும் குறை நிவர்த்தி பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

# சர்வதேச செய்திகள்

## ➢ குவாட் சந்திப்பு - இந்தியா பசிபிக் உறவுகள் (Quad Meet - Indo-Pacific Ties)

- ✓ மும்பையில் 26-11 பயங்கரவாதத் தாக்குதல் (2008) மற்றும் பதான் கோட் விமானப் படைத் தாக்குதல் (2016) ஆகியவற்றிற்கு நீதி கோரி, குழு அமைக்கப்பட்ட பிறகு முதல் முறையாக. ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள், இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் உள்ள அச்சுறுத்தல்கள் பற்றிய உளவுத் துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் குவாட் ஏற்கனவே ஒத்துழைப்பு நல்கி வருவதாகத் தெரிவித்தனர்.
- ✓ வெள்ளிக்கிழமை அன்று மெல்போர்னில் நான்காவது குவாட் அமைச்சர்கள் கூட்டத்தை நடத்திய அமைச்சர்கள் குழு, இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான கோவிட்-19 தடுப்பூசிகளை விரைவாகக் கொண்டு போய் சேர்க்கவும், இந்த ஆண்டு காலநிலை மாற்றம் குறித்த சிறப்புக் கூட்டத்தை நடத்தவும், பிராந்தியத்தில் கடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முயற்சிகளை முடுக்கி விட வேண்டும் என்றும் தீர்மானித்தது.

## ➢ மியூனிச் பாதுகாப்பு மாநாடு

- ✓ 1963ஆம் ஆண்டு முதல், மியூனிச் பாதுகாப்பு மாநாடு ஜெர்மனியின் மியூனிச் நகரில் சர்வதேச பாதுகாப்புக் கொள்கைக்கான வருடாந்திர மாநாடாக நடத்தப்பட்டு வருகிறது.
- ✓ இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கலந்து கொள்கிறார்.

## ➢ உக்ரைனில் இராணுவ நடவடிக்கை

- ✓ பிப்ரவரி 24 அன்று, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் - கிழக்கு ரஷ்யாவில் உள்ள டான்பாஸ் பிரிவினைவாதிகளைப் பாதுகாப்பதற்காக உக்ரைனில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவித்தார்.
- ✓ இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு ஐரோப்பிய அரசின் மீதான மிகப்பெரிய தாக்குதலில் தரை, கடல் மற்றும் வான்வழித் தாக்குதல் மூலம் ரஷ்யா மூன்று பக்கங்களிலும் உக்ரைனை ஆக்கிரமித்தது.

## ➢ தாவரம் அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பூசி

- ✓ கனடா – தாவர அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பூசியைப் பயன்படுத்த அங்கீகாரம் அளித்த முதல் நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- ✓ பிப்ரவரி 24 அன்று, மெடிகாகோ இங்க் மற்றும் கிளாக்சோஸ்மித்கிளைன் பிஜசி இணைந்து உருவாக்கிய உலகின் முதல், தாவரத்திலிருந்து பெறப்பட்ட கோவிட் -19 தடுப்பூசியான கோவிபென்ஸ்-ஐ பயன்படுத்த கனடா ஒப்புதல் அளித்தது.
- ✓ 18 முதல் 64 வயதுக்குட்பட்டவர்களுக்கு போடுவதற்கு இந்தத் தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **இந்தோ – பசிபிக் வியூகம்**

✓ அமெரிக்க அதிபர் ஜோ. பைடனின் நிர்வாகம் அதன் இந்தோ – பசிபிக் வியூகத்தை பிப்ரவரி 11, 2022 அன்று வெளியிட்டது.

✓ அந்த வியூகம், தெற்காசியாவிலும் இந்தியப் பெருங்கடலிலும் இந்தியாவை ஒத்த எண்ணம் கொண்ட கூட்டாளியாகவும் தலைவராகவும் அங்கீகரித்தது. அது மேலும், தெற்காசியாவில் செயலில் மற்றும் இணைப்பில் உள்ளதாகவும் அங்கீகரித்துள்ளது.

✓ சீனாவின் உறுதிப்பாடு, தொற்று நோய் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பிராந்தியத்தில் உள்ள சவால்களைச் சமாளிக்க கூட்டுத்திறனை வளர்ப்பதில் இந்த ஆவணம் கவனம் செலுத்துகிறது.

- **யூனிடரி டிஜிட்டல் அடையாள கூட்டமைப்பு (Unitary Digital Identity Framework)**

ஆதார் அட்டைக்கு நிகரான 'ஒற்றுமை டிஜிட்டல் அடையாள கட்டமைப்பை' நடைமுறைப்படுத்த இலங்கைக்கு மானியம் வழங்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.
இலங்கையில் ஐக்கிய டிஜிட்டல் அடையாள கட்டமைப்பை துரிதப்படுத்துவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

- **இந்தோ – ஜெர்மன் பணிக்குழு (Indo-German Working Group)**

✓ தரமான உள்கட்டமைப்புக்கான இந்தோ-ஜெர்மன் பணிக்குழுவின் 8வது வருடாந்திரக் கூட்டத்தின்போது இந்தியாவும் ஜெர்மனியும் 2022 வேலைத் திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளன.

✓ இரண்டு நாடுகளுக்கும் இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைத் திட்டம் 2022 ஆனது, இயக்கம், ஆற்றல், வட்டப் பொருளாதாரம், ஸ்மார்ட் விவசாயம் - விவசாயம் போன்றவற்றில் ஒத்துழைப்பை உள்ளடக்கும்.

- **விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (Comprehensive Economic Partnership Agreement)**

✓ இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் இரு தலைவர்கள் கலந்து கொள்ளும் மெய்நிகர் உச்சி மாநாட்டின்போது 18 பிப்ரவரி 2022 அன்று வர்த்தக மற்றும் முதலீட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்படும். இது விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

✓ இந்த ஒப்பந்தத்தின்கீழ், இரண்டு வர்த்தக பங்காளிகளும் தங்களுக்கு இடையே வர்த்தகம் செய்யப்படும் அதிகபட்ச எண்ணிக்கையிலான பொருட்களின் மீதான சுங்க வரிகளைக் குறைப்பார்கள் அல்லது நீக்குவார்கள்.

- **ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (Unified Payment Interface)**

✓ இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை பேமெண்ட் தளமாக ஏற்றுக் கொண்ட முதல் நாடு நேபாளம் ஆகும்.

✓ என்பிசிஐ இண்டர்நேஷனல் பேமெண்ட்ஸ் லிட், கேட்வே பேமெண்ட்ஸ் சர்வீசஸ் பிரைவேட் லிட் மற்றும் மனம் இன்போடெக் பிரைவேட் லிட் உடன் கைகோர்த்து நேபாளத்தில் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தைப் பயன்படுத்துகிறது.

➢ **இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் வர்த்தக ஒப்பந்தம்**

✓ பிப்ரவரி 18, 2022 அன்று கையெழுத்திடப்பட்ட இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் வர்த்தக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய அரபு அமீரகத்தில் இந்திய அரசு இந்திய தொழில்நுட்பக் கழகத்தை (ஐஐடி) அமைக்க உள்ளது.

✓ நாட்டிற்கு வெளியே ஐஐடி அமைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

✓ இந்தியாவில் தற்போது 23 ஐஐடி-கள் உள்ளன.

➢ **நீலப் பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுகை**

✓ இந்தியாவும் பிரான்சும் - கடல்சார் பாதுகாப்பில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 'நீல பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுகைக்கான சாலை வரைபடத்தை' ஒப்புக் கொண்டுள்ளன.

✓ பிப்ரவரி 20 அன்று வெளி விவகார அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கரின் பிரான்ஸ் நாட்டு பிரதமர் ஜீன் -யவ்ஸ் லு டிரியனுடன் மூன்று நாள் பயணத்தின்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

APOLLO STUDY CENTRE

# மாநாடுகள்

- அருங்காட்சியகங்களின் உலகளாவிய உச்சி மாநாடு 2022 மறு வடிவமைப்பு (**Reimagining Museums Global Summit 2022**)

✓ 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 15-16 தேதிகளில், இந்த வகையில் முதலாவதான, 'இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களை மறுவடிவமைத்தல்' என்ற உலகளாவிய உச்சி மாநாடு நடைபெறும்.

✓ அருங்காட்சியக மேம்பாடு மற்றும் நிர்வாகத்திற்கான சிறந்த உலகளாவிய நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களின் தற்போதைய தேவைகளைப் புரிந்து கொள்வதற்கும், இந்திய அருங்காட்சியகங்களை புதுப்பிப்பதற்கான வரைபடத்தை உருவாக்குவதற்கும் உலகம் முழுவதும் உள்ள நிபுணர்களை ஒன்றிணைப்பதை இந்த உச்சி மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **நித்தி ஆயோக்கின் ஃபின்டெக் திறந்த நிலை உச்சி மாநாடு (NITI Aayog's Fintech Open Summit)**

✓ நித்தி ஆயோக், போன்பே, ஏடபிள்யூஎஸ் மற்றும் ஈஒய் உடன் இணைந்து, பிப்ரவரி 7 முதல் 28 வரை மூன்றுவார கால மெய்நிகர் உச்சி மாநாடான 'ஃபின்டெக் ஓபன்'ஐ ஏற்பாடு செய்துள்ளது.

✓ இந்த வகையில் முதலாவதான ஃபின்டெக் ஓபன் முன் முயற்சியானது, கட்டுப்பாட்டாளர்கள், பின்டெக் வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்கள், தொழில்துறை தலைவர்கள், தொடக்க சமூகம் மற்றும் டெவலப்பர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து, யோசனைகளை பரிமாறிக் கொள்வதற்கும், புதுமைப்படுத்துவதற்காகவும் ஒன்றிணைக்கும்.

- **ஆசியான் - இந்தியா உயர்மட்ட மாநாடு**

✓ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மற்றும் வெளிவிவகார அமைச்சகம்- காணொலி காட்சி வாயிலாக பிப்ரவரி 7 முதல் 8, 2022 வரை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான ஆசியான் - இந்தியா உயர்மட்ட மாநாட்டைக் கூட்டாக நடத்தியது.

✓ 'ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க சந்தைக்கான அனுபவம் மற்றும் புதுமைகள்' என்ற தலைப்பில் இந்த மாநாடு நடைபெற்றது.

- **ஒரு பெருங்கடல் உச்சி மாநாடு**

✓ ஒரு பெருங்கடல் உச்சி மாநாட்டின் உயர்மட்டப் பிரிவில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

✓ ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் ப்ரெஸ்டில் பிப்ரவரி 9 முதல் 11 வரை பெருங்கடல் உச்சி மாநாடு பிரான்சால் ஏற்பாடு செய்யப்பட்டது.

✓ இந்த உச்சி மாநாட்டின் நோக்கம், ஆரோக்கியமான மற்றும் நிலையான கடல் சுற்றுச் சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் ஆதரிப்பதற்கும் உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை அணி திரட்டுவதேயாகும்.

- **4வது குவாட் வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு (4th QUAD Foreign Ministers' Meet)**

✓ பிப்ரவரி 11 அன்று, ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெற்ற 4வது குவாட் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.

ஜெய்சங்கர், தன்னுடைய அமெரிக்க, ஜப்பானிய மற்றும் ஆஸ்திரேலிய சகாக்களுடன் கலந்து கொண்டார்.

- ✓ 2020 அக்டோபரில் டோக்கியோவில் நடைபெற்ற சந்திப்பு மற்றும் செப்டம்பர் 2019இல் நியூ யார்க்கில் நடைபெற்ற தொடக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து குவாட் வெளியுறவு அமைச்சர்களின் நேரடி சந்திப்பு நடைபெறுவது இது மூன்றாவது மாநாடு ஆகும்.

## ➢ உலக நிலையான வளர்ச்சி உச்சி மாநாடு 2022 (World Sustainable Development Summit 2022)

- ✓ பிப்ரவரி 16, 2022 அன்று டெரி-யின் உலக நிலையான வளர்ச்சி உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி மெய்நிகராக தொடக்க உரையை நிகழ்த்துவார்.
- ✓ உலக நிலையான வளர்ச்சி உச்சி மாநாடு 2022இன் கருப்பொருள், ‘ஒரு நெகிழ்வான கிரகத்தை நோக்கி: ஒரு நிலையான மற்றும் சமமான எதிர்காலத்தை உறுதி செய்தல்’ என்பதாகும்.

## ➢ தேவயாதனம் மாநாடு (Devayatanam Conference)

- ✓ இந்திய தொல்லியல் துறையானது, ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின் ஒரு பகுதியாக, ‘தேவயாதனம் மாநாட்டை’ ஏற்பாடு செய்கிறது.
- ✓ தேவயாதனம் மாநாடு என்பது இரண்டு நாள் நடைபெறும் சர்வதேச மாநாடு ஆகும். தேவயாதனம் என்பது இந்தியக் கோயில் கட்டிடக் கலையின் ஒடிசி ஆகும்.
- ✓ இந்த மாநாடு 2022 பிப்ரவரி 25 மற்றும் 26 தேதிகளில் கர்நாடக மாநிலம் ஹம்பியில் நடைபெறுகிறது.

APOLLO STUDY CENTRE

# பாதுகாப்பு

- **இந்திய கடற்படையின் ஐந்தாவது ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பல் 'வாகிர்'**
  - ✓ இந்திய கடற்படையின் ஐந்தாவது ஸ்கார்ப்பீன் நீர்மூழ்கிக் கப்பலான 'வாகிர்' அதன் கடல் சோதனைகளைத் தொடங்கியது.
  - ✓ புராஜெக்ட் 75இன் ஐந்தாவது நீர்மூழ்கிக் கப்பலான 'வாகிர்' பிப்ரவரி 1 அன்று தனது கடல் சோதனையைத் தொடங்கியது.
  - ✓ இது நவம்பர் 2020இல் Mazagon Dock Shipbuilders Limited இன் Kanhoji Angre Wet Basin இல் இருந்து தொடங்கப்பட்டது.

- **கொங்குர்ஸ் - எம் (Konkurs-M)**
  - ✓ பிப்ரவரி 2 அன்று, பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் மற்றும் இந்திய இராணுவம் - இந்திய ராணுவத்திற்கு டாங்கி எதிர்ப்பு வழிகாட்டும் ஏவுகணையாகிய கொங்குர்ஸ்-எம் ஐ தயாரித்து வழங்குவதற்கான மூன்றாண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
  - ✓ கொங்கூர்-எம் என்பது இரண்டாம் தலைமுறை இயந்திரமயமாக்கப்பட்ட காலாட்படை எதிர்ப்பு பீரங்கி வழிகாட்டி ஏவுகணையாகும். இது கவச வாகனங்களை அழிக்கிறது.

- **மிலன் 2022**
  - ✓ பிப்ரவரி 26 முதல் மார்ச் 4, 2022 வரை நடைபெறவுள்ள இந்தியாவின் மிகப்பெரிய கடல்சார் பயிற்சியான 'மிலன் 2022'இல் பங்கேற்க உள்ளதை அமெரிக்காவும் ரஷ்யாவும் உறுதிப்படுத்தியுள்ளன.
  - ✓ இதில் பங்கேற்க மொத்தம் 46 நாடுகள் அழைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 35 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்பதை உறுதி செய்துள்ளன.
  - ✓ மிலன் என்பது இந்திய கடற்படையால் நடத்தப்படும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பலதரப்பு கடற்படைப் பயிற்சியாகும்.

- **பாதுகாப்பு எக்ஸ்போ (Def Expo) 2022**
  - ✓ பாதுகாப்பு அமைச்சகம் - குஜராத்தின் காந்தி நகரில் 2022 மார்ச் 10 முதல் 13 வரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் டெ∴ப் எக்ஸ்போ 2022 கண்காட்சியின் 12வது பதிப்பை நடத்த உள்ளது.
  - ✓ 900க்கும் மேற்பட்ட பாதுகாப்பு நிறுவனங்களும், 55 நாடுகளும் ஆசியாவின் மிகப்பெரிய பாதுகாப்பு கண்காட்சியான டெ∴ப் எக்ஸ்போ 2022ல் பங்கேற்பதை உறுதி செய்துள்ளன.
  - ✓ டெ∴ப்எக்ஸ்கே 2022இன் மையக் கருத்து, 'இந்தியா – வளர்ந்து வரும் பாதுகாப்பு உற்பத்தி மையம்' என்பதாகும்.

- **கிழக்கு பாலம் (Eastern Bridge) VI**
  - ✓ இந்திய விமானப்படை மற்றும் ஓமன் ராயல் ஏர்∴போர்ஸ் இணைந்து ஜோத்பூரில் உள்ள விமானப்படை நிலையத்தில் பிப்ரவரி 21 அன்று இருதரப்பு விமானப் போர் பயிற்சியான கிழக்கு பாலம் 6இன் ஆறாவது பதிப்பை ஆரம்பித்தன.
  - ✓ இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதுடன் கூடவே, தொழில்முறைத் தொடர்பு, அனுபவப் பரிமாற்றம் மற்றும் செயல்பாட்டு அறிவை மேம்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் இந்தப் பயிற்சி முயல்கிறது.

- ✓ **கிழக்கு பாலம் (Eastern Bridge) VI**
- ✓ இந்திய விமானப்படையும், ஓமன் ராயல் விமானப்படையும் ஐந்து நாள் இருதரப்பு விமானப் படை பயிற்சியான 'கிழக்கு பாலம்-6'ஐத் தொடங்கியுள்ளன.
- ✓ இந்தப் பயிற்சியானது ஜோத்பூர் விமானப்படை தளத்தில் பிப்ரவரி 21 முதல் 25 வரை நடைபெறும்.
- ✓ இது இந்தப் பயிற்சியின் ஆறாவது பதிப்பு ஆகும்.

➢ கோப்ரா வாரியர் (**Cobra Warrior) 2022**

- ✓ இங்கிலாந்தின் வாடிங்டனில் உள்ள ராயல் விமானப்படை தளத்தில் 'எக்ஸ் கோப்ரா வாரியர் 22' எனப்படும் பல நாடுகளின் விமானப் பயிற்சியில் இந்திய விமானப்படை பங்கேற்கிறது.
- ✓ இப் பயிற்சியில் பங்கேற்க ஐந்து உள்நாட்டு எல்சிய தேஜஸ் போர் விமானங்களை இந்தியா அனுப்பும். சி-17 விமானம் போக்குவரத்து ஆதரவை வழங்கும்.

➢ **மிலன் 2022 தொடங்கியது**

- ✓ இந்திய கடற்படையின் பலதரப்பு பயிற்சியான மிலன் 2022இன் சமீபத்திய பதிப்பு, விசாகப்பட்டினத்தில் உள்ள 'சிட்டி ஆஃப் டெஸ்டினி'யில் பிப்ரவரி 25 முதல் தொடங்குகிறது.
- ✓ மிலன் 2022 பயிற்சியின் கருப்பொருள் 'தோழமை – ஒருங்கிணைப்பு – ஒத்துழைப்பு' என்பதாகும். இது இந்தியாவை ஒரு பொறுப்பான கடல்சார் சக்தியாக உலகில் முன்னிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **இந்தியாவும் - ஜப்பானும் கூட்டு ராணுவப் பயிற்சியை நடத்த உள்ளன.**

- ✓ 'எக்ஸ் தர்மா கார்டியன் - 2022' என்று அழைக்கப்படும், ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியானது, இந்தியா மற்றும் ஜப்பான் இடையே பிப்ரவரி 27 முதல் மார்ச் 10, 2022 வரை கர்நாடகாவில் நடைபெறும்.
- ✓ எக்சர்சைஸ் தர்ம கார்டியன் என்பது 2018 முதல் இந்தியாவில் நடத்தப்படும் ஒரு வருடாந்திர பயிற்சி நிகழ்வாகும்.

# பொருளாதாரம்

➢ **தேசிய நிலம் பணமாக்கல் கழகம் (National Land Monetisation Corporation)**

✓ தேசிய நில பணமாக்கல் கழகத்தை ஒன்றிய அரசு நிறுவியுள்ளது.

✓ இந்த தேசிய நிலம் பணமாக்கல் கழகம், நிலம் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் முக்கிய சொத்துக்களை விரைவாக பணமாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

➢ **2021இல் இந்தியாவின் சிறந்த வர்த்தக கூட்டாளர்**

✓ 2021 காலண்டர் ஆண்டில் 112.3 பில்லியன் டாலர் வர்த்தகத்துடன் இந்தியாவின் முதன்மை வர்த்தக கூட்டாளியாக அமெரிக்கா இருந்து வந்துள்ளது.

✓ அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகத்தின் மதிப்பு 110.4 பில்லியன் டாலர் ஆகும்.

➢ **பணவியல் கொள்கைக் குழு (Monetary Policy Committee)**

➢ பிப்ரவரி 10 அன்று, ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி காந்ததாஸ் தலைமையில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட பணவியல் கொள்கைக் குழு – 2022 நிதியாண்டின் ஆறு மற்றும் இறுதி இருமாத மறு ஆய்வுக் கூட்டத்தில் பெஞ்ச் மார்க் வட்டி விகிதம் அல்லது ரெப்போ விகிதத்தில் தற்போதைய நிலையைத் தொடர முடிவுசெய்தது.

➢ **இ-ருப்பி (e-RUPI)**

✓ மற்றொரு முக்கிய முடிவாக, இ-ருப்பி பிரீபெய்டு டிஜிட்டல் வவுச்சர்களின்கீழ் உள்ள வரம்பு தற்போது 10,000 ஆக உள்ளது ஒரு வவுச்சருக்கு 1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் அந்தத் தொகை முழுவதுமாகப் பெறப்படும் வரை பல பரிவர்த்தனைகளுக்கு வவுச்சர்களை ஒன்றுக்கு மேற்பட்ட முறை பயன்படுத்தலாம்.

✓ அரசு திட்டங்களின் விநியோகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த நடவடிக்கை, நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு வவுச்சர்கள் மூலம் பெரிய அளவிலான சலுகைகளை வழங்க உதவும்.

➢ **நிதி கல்வியறிவு வாரம் (Financial Literacy Week)**

✓ இந்திய ரிசர்வ் வங்கி, நிதி கல்வியறிவு வாரம் 2022க்கான கருப்பொருளாக, 'டிஜிட்டலில் செல்லுங்கள், பாதுகாப்பாக செல்லுங்கள்' என்பதை தேர்வு செய்துள்ளது.

✓ இந்த மையக் கருத்து, 2020-2025 நிதிக் கல்விக்கான தேசிய மூலோபாயத்தின் மூலோபாய நோக்கங்களில் ஒன்றாகும். டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் வசதி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ரிசர்வ் வங்கி கவனம் செலுத்தும்.

➢ **ஏற்றுமதி 25 விழுக்காடு உயர்வு**

✓ தங்கம் இறக்குமதி வெறும் 2.4 பில்லியன் டாலராகக் கடுமையாக சரிந்தது, வர்த்தக பற்றாக்குறை 17.4 பில்லியன் டாலர்களை எட்டுகிறது.

✓ இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி ஜனவரியில் 34.5 பில்லியன் டாலரைத் தொட்டது. இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததைவிட 25.3 விழுக்காடு அதிகம் ஆகும். அதே சமயம் இறக்குமதிகள் சற்றே மெதுவான வேகத்தில் வளர்ந்தன. நாட்டின் வர்த்தக பற்றாக் குறை ஐந்து மாதங்களில் இல்லாத அளவிற்கு 17.4 பில்லியன் டாலருக்குச் சென்றது. இவ்வாறு செவ்வாயன்று வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ மதிப்பீடுகள் கூறுகின்றன.

## ➢ ஜே.பி. மோர்கன்

- ✓ அமெரிக்காவின் மிகப்பெரிய வங்கியான ஜே.பி. மோர்கன்- பிளாக்செயின் அடிப்படையிலான முப்பரிமான மெய்நிகர் மெட்டாவர்ஸ் பிளாட்.்.பார்மில் 'டிசென்ட்ராலேண்ட்' எனப்படும் லவுஞ்சை திறப்பதன் மூலம் 'மெட்டாவர்ஸ்'க்குள் நுழைந்த முதல் முன்னணி வங்கியாக மாறியது.
- ✓ மெட்டாவர்ஸ் என்பது ஒரு மெய்நிகர் உலகமாகும். அங்கு மக்கள் தங்களை டிஜிட்டல் அவதாரங்களாக் கருதிக் கொண்டு, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் மற்றும் ஆராயவும் முடியும்.

## ➢ ஐஏடிஏ பே (IATAPay)

- ✓ பிப்ரவரி 24 அன்று, உலகளாவிய வங்கிக் குழுமமாகிய, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு, இந்தியாவில் ஐஏடிஏ பே-ஐ அறிமுகப்படுத்துவதற்காக சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்துடன் கூட்டு சேர்ந்துள்ளதாக அறிவித்தது. இது ஒரு விமானத் துறையில் பணம் செலுத்தும் தளமாகும்.
- ✓ இந்தச் சேவையானது இந்தியாவில் உள்ள உள்நாட்டு நிகழ்நேரக் கட்டணத் திட்டமான யூனிபைடு பேமெண்ட் இன்டர்.்.பேஸ் ஐப் பயன்படுத்துகிறது. இதன்மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் இருந்து விமான டிக்கெட்டுகளுக்கு உடனடியாக பணம் செலுத்த முடியும்.

# நியமனங்கள்

➢ லெப்டினென்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே

✓ பிப்ரவரி 1 அன்று, லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே - இந்திய இராணுவத்தின் புதிய துணைத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

✓ பாண்டே கொல்கத்தாவில் கிழக்கு கமாண்டில் சேவையாற்றிய பிறகு, இராணுவ தலைமையகத்திற்கு வருகிறார்.

➢ **தினேஷ் பிரசாத் சக்லானி**

✓ பேராசிரியர் தினேஷ் பிரசாத் சக்லானி – தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் (NCERT) புதிய இயக்குநராக பிப்ரவரி 4 ஆம் தேதி நியமிக்கப்பட்டார்.

✓ பேராசிரியர் சக்லானிக்கு 2005இல் அவரது வரலாற்று எழுத்துகளுக்காக, பஞ்சாப் கலா மற்றும் ஜலந்தரின் சாகித்ய அகாடமியின் புகழ்பெற்ற அகாடமி விருது வழங்கப்பட்டது.

➢ **சாந்தி ஸ்ரீ துளிப்புடி பண்டிட் (Santishree Dhulipudi Pandit)**

✓ சாந்தி ஸ்ரீ துளிப்புடி பண்டிட் - ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக பதவி வகித்த முதல் பெண்மணி ஆனார்.

✓ 1992ஆம் ஆண்டு முதல் மகாராஷ்டிராவில் உள்ள சாவித்ரிபாய் பூலே புனே பல்கலைக் கழகத்தில் அரசியல் அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றிய பண்டிட் ஐந்தாண்டு காலத்திற்கு இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ **சுக்லா மிஸ்திரி**

✓ சுக்லா மிஸ்திரி - இந்தியன் ஆயிலின் இயக்குநராக (சுத்திகரிப்பு நிலையங்கள்) பொறுப்பேற்றார். நாட்டின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் எரிபொருள் சந்தைப்படுத்துதல் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் குழுவின் முதல் பெண் இயக்குநராகவும் ஆனார்.

➢ **டாக்டர்.எஸ். உன்னிகிருஷ்ணன் நாயர்**

புகழ்பெற்ற விஞ்ஞானியும் ஏவுகணை செலுத்து வாகன நிபுணருமான டாக்டர்.எஸ். உன்னி கிருஷ்ணன் நாயர் - விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் (Vikram Sarabhai Space Centre) இயக்குநராக பிப்ரவரி 7 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

✓ விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் என்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் முக்கிய விண்வெளி ஆராய்ச்சி மையமாகும். மேலும் துணை செயற்கைக் கோள் திட்டங்களுக்கான ராக்கெட் மற்றும் விண்வெளி வாகனங்களில் நிபுணத்துவம் பெற்றது.

➢ **எஸ். கிஷோர்**

✓ மூத்த அதிகாரி எஸ். கிஷோர், மத்திய பணியாளர் தேர்வு ஆணையத்தின் (SSC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ பணியாளர் மற்றும் பயிற்சித் துறை வழங்கிய உத்தரவின்படி இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ **கலா ராமச்சந்திரன்**

1994 பேட்ச் ஹரியானா கேடர் ஐபிஎஸ் அதிகாரியாகிய கலா ராமச்சந்திரன், குர்கானின் முதல் பெண் போலிஸ் கமிஷனர் ஆனார்.

கலா ராமச்சந்திரன் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட ஐபிஎஸ் அதிகாரி ஆவார்.



APOLLO STUDY CENTRE

➢ **ஜி. அசோக் குமார்**

- ✓ முன்னாள் கடற்படை துணைத் தலைவர் ஜி. அசோக் குமார் - தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தில் முதல் தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக (National Maritime Security Coordinator) நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ நாட்டின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் ஒட்டு மொத்த நோக்கத்துடன், பல்வேறு முக்கிய பங்குதாரர்களிடையே ஒற்றுமையை உறுதிப் படுத்துவதற்காக தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

➢ **அனூப் குமார் மெண்டிரட்டா**

- ✓ பிப்ரவரி 25 அன்று, அனூப் குமார் மெண்டிரட்டா – உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் மத்திய சட்டச் செயலாளர் ஆனார்.
- ✓ மெண்டிரட்டா ஒரு நீதித்துறை அதிகாரியாக அவரது பணி மூப்பு அடிப்படையில் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவரது பெயர் சமீபத்தில் உச்ச நீதிமன்ற கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்பட்டது.

APOLLO STUDY CENTRE

# விருதுகள்

- **தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் குறும்பட விருது**

✓ தேசிய மனித உரிமைகள் ஆணையம் நடத்திய போட்டியில், கல்விக்கான உரிமை குறித்த வலுவான செய்தியுடன் தெரு முள்ளின் கதையை சித்தரிக்கும் அகுலா சந்தீப்பின் 'ஸ்ட்ரீட் ஸ்டுடண்ட்' என்ற தெலுங்கு குறும்படம் முதல் பரிசைப் பெற்றது.

- **உத்தரப்பிரதேசத்தின் அலங்கார ஊர்தி**

உத்தரப் பிரதேசத்தின் அலங்கார ஊர்தி – குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்ற 12 மாநிலங்கள்-யூனியன் பிரதேசங்களில் உத்தரப் பிரதேசத்தின் அலங்கார ஊர்தி சிறந்த அலங்கார ஊர்தியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

✓ பிப்ரவரி 4ஆம் தேதி பாதுகாப்பு அமைச்சகம் இதை அறிவித்தது.

- **நெருப்புடன் எழுதுதல் (Writing With Fire)**

✓ இந்திய ஆவணப்படமான 'நெருப்புடன் எழுதுதல்' – அகாடமி விருதுகளின் 94வது பதிப்பில் சிறந்த ஆவணப் படப் பிரிவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

✓ இந்தப் போட்டிக்கு இந்த ஆண்டு பரிந்துரைக்கப்பட்ட ஒரே இந்திய திரைப்படம் இதுவேயாகும்.

- **வாடிக்கையாளர் அங்கீகாரத்தின் குரல் (Voice of Customer Recognition)**

✓ ஏர்போர்ட்ஸ் கவுன்சில் இன்டர்நேஷனல் உலக வாடிக்கையாளரின் குரல் முன் முயற்சியின் கீழ் ஏழு இந்திய விமான நிலையங்கள் - வாடிக்கையாளர்களின் அங்கீகாரத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

✓ 2021ஆம் ஆண்டில் ஏசிஐ – ஏஎஸ்கியூ (ACI-ASQ) கணக்கெடுப்பில் பங்கேற்ற பிறகு தேர்வு செய்யப்பட்ட ஏழு ஏஏஐ விமான நிலைங்களில் சென்னை, கொல்கத்தா, கோவா, புனே, பாட்னா, புவனேஸ்வர் மற்றும் சண்டிகர் ஆகியவை அடங்கும்.

✓ விமான நிலைய சேவை தர கணக்கெடுப்பு (Airport Service Quality) என்பது உலகப் புகழ்பெற்ற மற்றும் சர்வதேச அளவில் நிறுவப்பட்ட உலகளாவிய தரப்படுத்துதல் திட்டமாகும்.

- **நீனா குப்தா**

✓ 2021ஆம் ஆண்டிற்கான இளம் கணிதவியலாளர்களுக்கான ராமானுஜன் பரிசு கொல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் கணிதவியலாளரான பேராசிரியர் நீனா குப்தாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

✓ அ∴பைன் இயற்கணித வடிவியல் மற்றும் பரிமாற்ற இயற்கணிதம் ஆகியவற்றில் அவர் ஆற்றிய சிறந்த பணிக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ பேராசிரியர் குப்தா, இந்த விருதைப் பெறும் நான்காவது இந்தியராகவும், நாட்டிலிருந்து விருதைப் பெற்ற இரண்டாவது பெண்ணும் ஆவார்.

# புகழ்பெற்ற நபர்கள்

➢ **இரண்டாம் எலிசபெத் மகாராணி**

- ✓ இரண்டாம் எலிசபெத் மகாராணி, 70 ஆண்டுகள் ஆட்சி செய்த முதல் பிரிட்டிஷ் மன்னர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அவர் ஒரு இறையாண்மை கொண்ட அரசில் நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னராக இருந்த பிரான்சின் பதினான்காம் லூயியை விஞ்சி விட்டார்.
- ✓ இரண்டாம் எலிசபெத், ஐக்கிய இராச்சியம் மற்றும் 14 காமன்வெல்த் நாடுகளின் இராணி ஆவார்.
- ✓ இரண்டாம் எலிசபெத் ஐக்கிய இராச்சியம் மற்றும் 14 பிற காமன்வெல்த் நாடுகளின் ராணி ஆவார். 6 பிப்ரவரி 1952இல், அவரது தந்தை கிங் ஆறாம் ஜாா்ஜின் மரணத்திற்குப் பிறகு அவர் இராணி ஆக ஆனார்.

➢ **கௌதம் அதானி**

- ✓ அதானி குழுமத்தின் தலைவராகிய கௌதம் அதானி – ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் முகேஷ் அம்பானியை விஞ்சி, இந்தியா மற்றும் ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர் ஆனார்.
- ✓ ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, பிப்ரவரி 8 அன்று அதானியின் நிகர மதிப்பு 88.5 பில்லியன் டாலராக இருந்தது. அதே சமயம் அம்பானியின் மதிப்பு 87.9 பில்லியன் டாலர் ஆகும்.
- ✓ இந்த மிகப்பெரிய உயர்வு மூலம், அதானி, முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி. உலகின் 10 வது பணக்காரர் ஆனார்.

➢ **உலகின் முதலாவது சின்னம்மை தடுப்பூசியை உருவாக்கியவர்**

- ✓ உலகின் முதல் சின்னம்மை தடுப்பூசியை உருவாக்கிய டாக்டர். மிக்சியாகி த்காஹாஷியின் 94வது பிறந்த நாளை பிப்ரவரி 17, 2022 அன்று கூகுள் டூடுள் கொண்டாடியது.
- ✓ இந்த ஜப்பானிய வைராலஜி மருத்துவர், மருத்துவம் பயின்றார். அவரது மகனுக்கு இந்தத் தொற்று ஏற்பட்ட பிறகு, மிகவும் பரவக் கூடிய மற்றும் தொற்றும் தன்மையுடைய நோயை திறம்பட எதிர்ப்பதற்காக தனது நிபுணத்துவத்தை பயன்படுத்தினார்.

➢ **கேட்டன்ஜி பிரவுன் ஜாக்சன் (Ketanji Brown Jackson)**

- ✓ பிப்ரவரி 25 அன்று, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் - பெடரல் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கேட்டன்ஜி பிரவுன் ஜாக்சனை அமெரிக்க உச்ச நிதி மன்றத்திற்குப் பரிந்துரைத்தார்.
- ✓ இதன்மூலம், அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றும் முதல் கறுப்பினப் பெண் என்ற பெருமையை ஜாக்சன் பெற்றார்.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **‘அடல் பிஹாரி வாஜ்பாய்’ என்ற தலைப்பிலான புத்தகம்**

✓ சகரிகா கோஸ் எழுதிய, ‘அடல் பிஹாரி வாஜ்பாய்’ என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இது முன்னாள் இந்தியப் பிரதமரின் வாழ்க்கை வரலாறு ஆகும்.

✓ சகரிகா கோஸ் ஒரு பத்திரிக்கையாளர் ஆவார். அவர், ‘இந்திரா: இந்தியாவின் மிகவும் சக்தி வாய்ந்த பிரதமர்’ என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார்.

- **அடுத்த பெருந்தொற்றை எப்படித் தடுப்பது**

✓ பில் கேட்ஸ் எழுதிய, அடுத்த பெருந்தொற்றைத் தடுப்பது எப்படி?’ என்ற புத்தகம் இந்த ஆண்டு மே 2022 இல் வெளியிடப்படும்.

✓ இந்தப் புத்தகத்தில் எதிர்கால பெருந்தொற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி பில்கேட்ஸ் எழுதியுள்ளார். அதன்மூலம், உலகெங்கிலும் உள்ள அனைவருக்கும் சிறந்த சுகாதார சேவை கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

- **உலகின் முதலாவது ஹைட்ரஜனில் இயங்கும் பறக்கும் படகு ‘தி ஜெட்’**
  - ✓ துபாய் நிறுவனமான தி ஜெட் ஜீரோ எமிஷன், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் உலகின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் பறக்கும் படகு, ‘தி ஜெட்’ஐ அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது.
  - ✓ இந்த, ‘தி ஜெட்’ அதி நவீன குணாதிசயங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது. இது 40 நாட்ஸ் வேகத்தில் நீர்நிலைகளுக்குமேல் அமைதியாகப் பறக்கும் திறன் கொண்டது. அத்துடன் 8-12 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறனும் கொண்டுள்ளது.

- **சந்திராயன் - 3**

  இந்தியா - இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சந்திராயன் -3 ஐ விண்ணில் ஏவ உள்ளது.
  - ✓ எட்டு ஏவுகணை வாகனப் பயணங்கள், ஏழு விண்கலப் பயணங்கள் மற்றும் நான்கு தொழில்நுட்ப செயல்விளக்கப் பணிகள் உட்பட 19 பயணங்களை இந்த ஆண்டு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
  - ✓ ககன்யான் மற்றும் ஆதித்யா சோலார் மிஷன் போன்ற பெரிய திட்டங்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருப்பதால். இந்த ஆண்டு இஸ்ரோவுக்கு மிகவும் பிசியான ஆண்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **பரம் பிரவேகா (Param Pravega)**
  - ✓ பெங்களுருவில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ், இந்தியாவில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த சூப்பர் கணினிகளில் ஒன்றான பரம் பிரவேகாவை நிறுவி இயக்கியுள்ளது.
  - ✓ ஒரு இந்திய கல்வி நிறுவனத்தில் உள்ள மிகப்பெரிய சூப்பர் கணினியும் இதுவே ஆகும்.

- **நானோ துகள்கள் பூசப்பட்ட ஆன்டிவைரல் முகக் கவசம்**
  - ✓ இந்திய விஞ்ஞானிகள் தாமிரத்தை அடிப்படையாகக் கொண்ட நானோ துகள்களால் பூசப்பட்ட ஆன்டிவைரல் முகக் கவசத்தை உருவாக்கியுள்ளனர். இதுசுயமாக கிருமிநாசினியை உருவாக்கும் தன்மை கொண்டதாகும். இது மக்கும் தன்மை கொண்டது, அதிக சுவாசம் தரக்கூடியது மற்றும் துவைக்கக் கூடியதும் ஆகும்.
  - ✓ இது, பொடி உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்பட்ட ஆராய்ச்சி மையத்தின் (International Advanced Research Centre for Powder Metallurgy and New Materials) விஞ்ஞானிகளால், செல்லுலார் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் (Centre for Cellular & Molecular Biology (CSIR-CCMB)) மற்றும் பெங்களூரைச் சேர்ந்த ரெசில்கெமிக்கல்ஸ் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

- **ஸ்காம்பெராய்ட்ஸ் பெலஜிகஸ் (Scomberoides Pelagicus)**
  - ✓ மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (Central Marine Fisheries Research Institute) இந்தியக் கடற்கரையிலிருந்து ஒரு புதிய கராங்கிட் (வட்டா) இனத்தை அடையாளம் கண்டுள்ளது.
  - ✓ ஸ்காம்பெராய்ட்ஸ் பெலஜிகஸ் என்று அழைக்கப்படும் இந்த மீன், ‘ராணி மீன்’ குடும்பத்தைச் சேர்ந்தது. இது உள்ளூரில் ‘பொலவட்டா’ என்று அழைக்கப்படுகிறது.

➢ **சிறுகோள் நிலப்பரப்பு-தாக்க கடைசி எச்சரிக்கை அமைப்பு (Asteroid Terrestrial-impact Last Alert System -ATLAS)**

✓ இந்த அட்லாஸ் அமைப்பு பூமியை நோக்கிச் செல்லும் அபாயகரமான சிறு கோள்களைக் கண்டறிய இரவு முழுவதும் வானத்தை ஸ்கேன் செய்யும் முதல் சிறு கோள் கண்டறிதல் அமைப்பு ஆகும்.

✓ நாசாவின் நிதியுதவியுடன்கூடிய இந்த அமைப்பு, ஹவாய் பல்கலைக் கழகத்தின் வானியல் நிறுவனத்தால் இயக்கப்படுகிறது.

➢ **சதுர கிலோமீட்டர் வரிசை கண்காணிப்பகம் (Square Kilometre Array Observatory)**

✓ பிப்ரவரி 2 அன்று, இந்தியா – 'சதுர கிலோமீட்டர் வரிசை கண்காணிப்பு' திட்டத்தில் பங்கேற்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

✓ உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கியை அமைப்பதற்காக கையெழுத்தான இந்த ஒப்பந்தம் ஓராண்டுக்கு செல்லுபடியாகும்.

➢ **விண்வெளி நிலையம் 2030 ஆம் ஆண்டில் ஓய்வு பெற உள்ளது.**

✓ நாசா – சர்வதேச விண்வெளி நிலையம் 2030இல் ஓய்வு பெறுவதற்கான திட்டங்களை அறிவித்தது. பின்னர் 2031இல் பசிபிக் பெருங்கடலில் 'பாயிண்ட் நெமோ' எனப்படும் மக்கள் வசிக்காத பகுதியில் மோதத் திட்டமிட்டுள்ளது.

➢ **2DPA-1**

✓ மாசசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி ஆராய்ச்சியாளர்கள் - 2டிபிஏ-1 எனப்படும் ஒரு புதிய இருபரிமாண பாலிமர் பொருளை உருவாக்கியுள்ளனர். இது எஃகைவிட வலிமையானது, ஆனால் பிளாஸ்டிக் போன்று இலகுவானது.

✓ புதிய பாலிமரானது எஃகின் மொத்த வலிமையை விட இரண்டு மடங்கு அதிகமானது மற்றும் குண்டு துளைக்காத கண்ணாடியின் சிதைவு எதிர்ப்பைவிட ஆறு மடங்கு அதிகமாக உள்ளது.

➢ **சிறுகோள் (Asteroid) 38971 (2001 CB21)**

✓ 138971 (2001 சிபி21) எனப்படும் ஒரு ராட்சத சிறு கோள் பூமியை நோக்கி வருகிறது. இது மார்ச் மாதத்தில் நெருங்கிவிட வாய்ப்பு உள்ளது.

✓ இது ஈபிள் கோபுரத்தை விட நான்கு மடங்கு பெரியதாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது 4.5 மில்லியன் கிமீ தொலைவில் இருக்கும் என்பதால் அபாயகரமானதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

➢ **கோவிட்-19 டிஎன்ஏ தடுப்பூசி**

✓ கோவிட்1-9க்கு எதிராக டிஎன்ஏ தடுப்பூசியை வழங்கிய உலகின் முதல் நாடாக இந்தியா மாறியுள்ளது.

✓ உலகின் முதல் பிளாஸ்மிட் டிஎன்ஏ தடுப்பூசியான சைகோவி-டி (ZyCoV-D ) ஆனது அகமதாபாத்தைச் சேர்ந்த தடுப்பூசி உற்பத்தி நிறுவனமான சைடஸ் கடிலா என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது, இது பாட்னாவில் முதல் முறையாக போடப்பட்டது.

➢ **இஸ்ரோ புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை ஏவியது**

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், பிப்ரவரி 14, 2022 அன்று ரேடார் இமேஜிங் செயற்கைக் கோள் ஆகிய EOS-04 ஐ விண்ணில் செலுத்துகிறது.

- ✓ அனைத்து வானிலை நிலைகளிலும் உயர்தர படங்களை வழங்கும் வகையில் இந்த செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ இது பிப்ரவரி 14 ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து 05.59 மணிக்கு போலார் சாட்டிலைட் ஏவுகணை வாகனத்தில் (PSLV-C52) ஏவப்படும்.

### ➢ ஸ்புட்னிக் லைட் (Sputnik Light) கோவிட்-19 தடுப்பூசி

- ✓ இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் அமைப்பு - ஸ்புட்னிக் லைட் கோவிட்-19 தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதியை வழங்கியது.
- ✓ இதன்மூலம், நாட்டில் பயன்பாட்டிற்கான ஒப்புதலைப் பெற்ற ஒன்பதாவது கோவிட்-19 தடுப்பூசியாக இது மாறியுள்ளது.
- ✓ ஸ்புட்னிக் மற்றும் ஸ்புட்னிக் லைட் ஆகியவை மறுசீரமைப்பு மனித அடினோவைரஸ் திசையன் தளத்தை அடிப்படையாகக் கொண்டது.

### ➢ லேக்டோபேசில்லஸ் பிளாண்டேரம் ஜேபிசி5 (Lactobacillus Plantarum JBC5)

- ✓ இந்திய விஞ்ஞானிகள் அடுத்த தலைமுறை புரோபயாடிக் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
- ✓ கௌஹாத்தியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட ஆய்வுக் கழகத்தின் (Institute of Advanced Study in Science and Technology) இந்திய விஞ்ஞானிகள் குழு, பால் உற்பத்தியில் இருந்து அடுத்த தலைமுறை புரோபயாடிக் பாக்டீரியாவான லேக்டோபேசில்லஸ் பிளாண்டேரம் ஜேபிசி5 ஐ அடையாளம் கண்டுள்ளது.
- ✓ ஆரோக்கியமாக வயதாவதை ஊக்குவிப்பதில் இந்தத் தயாரிப்பு பெரும் நம்பிக்கையைக் கொடுக்கிறது.

### ➢ நாசா

நாசா - சூரியன் - பூமி இணைப்பு, சூரியனின் இயக்கவியல் மற்றும் தொடர்ந்து மாறிவரும் விண்வெளிச் சூழல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள உதவும் இரண்டு அறிவியல் பணிகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- ✓ நாசாவல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த இரண்டு பயணங்களும் மல்டி-ஸ்லிட் சோலார் எக்ஸ்ப்ளோரர் (Multi-slit Solar Explorer) மற்றும் ஹீலியோஸ்வார்ம் பணிகளும் ஆகும். இவை சூரியனின் கொரோனாவைப் படிப்பதையும் சூரியக் காற்றின் காந்தப் புலத்தை அளவிடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

### ➢ இஸ்ரோ பிஎஸ்எல்வி – சி 52 செயற்கைக் கோள்

- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், 14 பிப்ரவரி 2022 அன்று மூன்று செயற்கைக் கோள்களை (ஈஓஎஸ்-04, ஒரு ரேடார் இமேஜிங் செயற்கைக் கோளுடன் அதன் இரண்டு பயணிகள் செயற்கைக் கோள்களான இன்ஸ்பையர் சாட்-1 மற்றும் ஐஎன்எஸ்-2டிடி) சுமந்து கொண்டு பிஎஸ்எல்வி-சி52 என்ற துருவ செயற்கைக் கோள் ஏவுகணையை, சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து ஏவியது.

### ➢ போலரிஸ் விடியல் (Polaris Dawn)

- ✓ 14 பிப்ரவரி 2022 அன்று ஜாரெட் ஐசக்மேன் அறிவித்த தனித்துவமான விண்வெளிப் பயணக் குழுவில் ஸ்பேஸ் எக்ஸ் பொறியாளர் அன்னா மேனனும் இருப்பார்.
- ✓ இந்த முதல் பணிக்கு போலரிஸ் டான் என்று பெயரிடப்பட்டுள்ளது.

## ➢ அழிந்து வரும் உயிரினங்கள் - கோலாக்கள்

- ✓ ஆஸ்திரேலியா, கோலாக்களை (koalas) அழிந்து வரும் உயிரினங்களாக அதிகாரபூர்வமாகப் பட்டியலிட்டுள்ளது.
- ✓ இந்த கோலா இனங்கள் ஆஸ்திரேலியாவில் குறைந்தது 25 மில்லியன் ஆண்டுகளாக இருந்து வருகின்றன.
- ✓ தற்போது ஒரே ஒரு இனம் மட்டுமே உள்ளது - the Phascolarctos cinereus.

## ➢ புளூட்டோவின் வளிமண்டல அழுத்தம் (Pluto's Atmospheric Pressure)

- ✓ இந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பாளர்கள் உட்பட விஞ்ஞானிகள் குழு ஒன்று புளூட்டோவின் வளிமண்டல அழுத்தத்தின் துல்லியமான மதிப்பை அதன் மேற்பரப்பில் பெற்றுள்ளன.
- ✓ இது பூமியின் சராசரி கடல் மட்டத்தில் உள்ள வளிமண்டல அழுத்தத்தைவிட 80,000 மடங்கு குறைவாக உள்ளது.
- ✓ 3.6 மீ தேவஸ்தல் ஆப்டிகல் தொலைநோக்கி (இந்தியாவின் மிகப்பெரிய ஆப்டிகல் தொலைநோக்கி) ஐப் பயன்படுத்தி பெறப்பட்ட தரவுகளிலிருந்து இந்த அழுத்தம் கணக்கிடப்பட்டுள்ளது.

## ➢ அல்சியோனஸ் (Alcyoneus)

- ✓ மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய விண்மீன் அல்சியோனஸ் ஆகும்.
- ✓ லைடன் ஆய்வகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மனிதர்களால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய விண்மீன் அல்சியோனியசைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ இந்த அல்சியோனியஸ் சூரியனை விட 240 பில்லியன் மடங்கு பெரியது ஆகும். இது கிரேக்க வானத்தின் கடவுளான உரேனோசின் மகனின் பெயரால் அழைக்கப்படுகிறது.

## ➢ எச்ஐவி நோயிலிருந்து முற்றிலும் குணமடைந்த முதல் பெண்

- ✓ லுகேமியா நோயால் பாதிக்கப்பட்ட ஒரு அமெரிக்க நோயாளி, எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் வைரசை இயற்கையாகவே எதிர்க்கும் நன்கொடையாளரிடமிருந்து ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சையைப் பெற்ற பிறகு, எச்ஐவி நோயால் குணப்படுத்தப்பட்ட முதல் பெண் மற்றும் மூன்றாவது நபராக ஆனார்.
- ✓ டென்வரில் நடந்த ரெட்ரோவைரஸ்கள் மற்றும் சந்தர்ப்பவாத நோய்த் தொற்றுகள் பற்றிய மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கலப்பு இனத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுப் பெண்ணின் நேர்வானது, தொப்புள் கொடியின் இரத்தத்தை உள்ளடக்கிய முதல் வழக்கும் ஆகும்.

## ➢ கிரேட்டர் மாலத்தீவு ரிட்ஜ் பற்றிய ஆய்வு

- ✓ சமீபத்தில், ஆராய்ச்சியாளர்கள் மேற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள புவி இயக்கவியல் அம்சமான 'கிரேட்டர் மாலத்தீவு ரிட்ஜ்' இன் டெக்டோனிக் பரிணாமத்தைக் கண்டுபிடித்தனர்.
- ✓ இந்த டெக்டோனிக் பரிணாமல் அசல் கோண்ட்வானாலாந்து பிளவை மறுகட்டமைக்க உதவும்.
- ✓ இந்த அம்சம், இன்றைய கண்டங்கள், கண்டதுண்டுகள் மற்றும் இந்தியப் பெருங்கடலில் கடல் படுகைகள் உருவாவதற்கு வழிவகுத்தது.

## ➢ வளைந்த கால் கெக்கோ (Bent-Toed Gecko)

- ✓ மேகாலயாவின் ரி-போய் மாவட்டத்தில் உள்ள உம்ரோ் ராணுவ நிலையத்தில் இருந்து, வளைந்த கால் விரல் கெக்கோ அல்லது பல்லியின் புதிய இனத்தை ஆராய்ச்சியாளா்கள் குழு சமீபத்தில் கண்டுபிடித்தது.
- ✓ கெக்கோ அல்லது பல்லியின் புதிய இனமானது Cyrtodactylusexercitus குடும்பத்தைச் சாா்ந்தது. (எக்சா்சிடஸ் என்றால் லத்தீன் மொழியில் ராணுவத்தைக் குறிக்கும்)
- ✓ இந்தியாவுக்குச் செய்த சேவைகளுக்காக, இந்திய இராணுவத்தின் வீரத்தைக் கௌரவிக்கும் வகையில் இந்த பெயா் வைக்கப்பட்டுள்ளது.

## ➢ ஐரோப்பா முழுவதும் யூனிஸ் புயல்

- ✓ யூனிஸ் புயல் பிப்ரவரி 19, 2022 அன்று லண்டனில் முதல் சிவப்பு வானிலை எச்சரிக்கையைத் தூண்டியது.
- ✓ 1984ஆம் ஆண்டு பிரிட்டன் மற்றும் வடக்கு பிரான்சை பெரும் புயல் தாக்கியதிலிருந்து, ஐரோப்பாவில் ஏற்பட்ட மிகவும் சக்திவாய்ந்த புயல்களில் இதுவும் ஒன்று ஆகும்.

## ➢ யூ.ஃ.ப்லிக்டிஸ் ஜலதாரா (**EuphlyctisJaladhara**)

- ✓ புனேவில் உள்ள இந்திய விலங்கியல் ஆய்வு மையம், மேற்குத் தொடா்ச்சி மலையை ஒட்டிய அனைத்து மாநிலங்களிலும் உள்ள நன்னீா் பகுதிகளில் வளரும் புதிய தவளை இனத்தைக் கண்டுபிடித்துள்ளது.
- ✓ இந்தத் தவளையின் பொதுவான பெயா் ஜலதாரா சறுக்குத் தவளை ஆகும். இதன் அறிவியல் பெயா் யூ.ஃ.ப்லிக்டிஸ் ஜலதாரா ஆகும். இந்த இனம் முதன் முதலில் கேரளாவின் எா்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள தட்டேக்காடு பறவைகள் சரணாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள நன்னீா் நிலைகளில் கண்டுபிடிக்கப்பட்டது.

## ➢ கிராமப்புற விவசாய வானிலை சேவை (Gramin Krishi Mausam Sewa) திட்டம்

- ✓ ரூா்க்கே-யில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் 'கிராமப்புற விவசாய வானிலை சேவை' திட்டத்தின் ஒரு பகுதியாக பிராந்திய விவசாயிகள் விழிப்புணா்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, விவசாயிகளுக்கான கிசான் மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ விவசாயிகள் இப்போது, 'கிசான்' செயலி மூலம் தங்கள் மொபைல் போன்களில் வட்டார அளவிலான வானிலை முன்னறிவிப்பு மற்றும் வானிலை அடிப்படையிலான வேளாண் ஆலோசனைப் புல்லட்டின்களை எளிதாக அணுகலாம்.

# விளையாட்டுகள்

➢ **இந்த ஆண்டின் சிறந்த உலக அளவிலான தடகள விளையாட்டு வீரர்**

✓ ஜனவரி 31 அன்று, இந்திய ஹாக்கி கோல்கீப்பர், பி.ஆர் ஸ்ரீஜேஷ் - அவருடைய 2021ஆம் ஆண்டு சாதனைக்காக, இந்த ஆண்டுக்கான 'உலக சிறந்த தடகள விளையாட்டு வீரர்' என்ற விருதை வென்றார்.

✓ 2020ஆம் ஆண்டில் இந்த விருதை வென்ற இந்திய மகளிர் ஹாக்கி கேப்டன் ராணி ராம்பால், 2019ஆம் தனது செயல்திறனுக்காக இந்த விருதை வென்ற ஒரே இந்தியர் ஆவார்.

➢ **லாரியஸ் 'இந்த ஆண்டின் உலக திருப்புமுனை' விருது**

✓ பிப்ரவரி 2 அன்று, இந்தியாவின் சாம்பியன் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா – மதிப்புமிக்க லாரஸ் 'இந்த ஆண்டின் உலக திருப்புமுனை' விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.

✓ ஆகஸ்ட் 8, 2020 அன்று டோக்கியோ ஒலிம்பிக்கில் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய தடகள வீரர் நீரஜ் ஆவார்.

➢ **குளிர்கால ஒலிம்பிக்**

✓ பிப்ரவரி 3 அன்று, இந்தியா, சீனாவில் பிப்ரவரி 4-20 வரை திட்டமிடப்பட்டுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இராஜாங்க அடிப்படையில் புறக்கணிப்பதாக அறிவித்தது.

✓ பெய்ஜிங்கில் உள்ள இந்திய மிஷன் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க மற்றும் நிறைவு விழாக்களில் பங்கேற்காது.

✓ ஜூன் 2020 கால்வான் மோதலில் ஈடுபட்ட பிஎல்ஏ ரெஜிமென்ட் கமாண்டர் குய் ∴பபாவோ, ஒலிம்பிக் 'டார்ச் ரிலே'யின்போது தீபம் ஏந்துபவர்களில் ஒருவராக இருப்பார் என்று சீனா அறிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

➢ **2028 லாஸ் ஏஞ்செல்ஸ் ஒலிம்பிக்**

✓ சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி – ஜூலை 21 முதல் ஆகஸ்ட் 6, 2028 வரை திட்டமிடப்பட்டுள்ளது. 2028 லாஸ் ஏஞ்செல்ஸ் ஒலிம்பிக்கில் சர்∴பிங், ஸ்கேட்போர்டிங் மற்றும் ஸ்போர்ட் கிளைம்பிங் போன்றவற்றைச் சேர்க்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ பாரிஸ் அமைப்பாளர்களின் வேண்டுகோளின்பேரில் 2024 ஒலிம்பிக்கில் பிரேக் டான்சிங் அறிமுகப்படுத்தப்படும்.

➢ **19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான உலகக் கோப்பை போட்டிகள்**

✓ பிப்ரவரி 5ஆம் தேதி ஆன்டிகுவாவின் நார்த் சவுண்டில் உள்ள சர் விவியன் ரிச்சாட்ஸ் ஸ்டேடியத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியா. இங்கிலாந்தை நான்கு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோற்கடித்து ஐந்தாவது, 19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான உலகக் கோப்பையை வென்று சாதனை படைத்தது. இதற்கு முன்பாக 2000, 2008, 2012 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் 19 வயதுக்குக் குறைவானவர்களுக்கான உலகக் கோப்பையை இந்தியா வென்றிருந்தது.

➢ **ஜரீன் வஸ்ட் (Ireen Wust)**

✓ ஜரீன் வஸ்ட் - ஐந்து வெவ்வேறு ஒலிம்பிக் போட்டிகளில் தனிநபர் பிரிவில் தங்கம் வென்ற முதல் தடகள வீரர் ஆனார்.

- ✓ ஜரீன் வஸ்ட் ஏற்கனவே விளையாட்டு வரலாற்றில் சிறந்த வேக ஸ்கேட்டர்களில் ஒருவராக விளங்கியுள்ளார்.
- ✓ பெய்ஜிங்கில் நடைபெற்ற இந்தப் பதிப்பில் 1,500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் நெதர்லாந்து வீராங்கனையான வஸ்ட வெற்றி பெற்றார். இதன்மூலம் ஐந்து வெவ்வேறு ஒலிம்பிக் போட்டிகளில் தனிநபர் தங்கப் பதக்கங்களை வென்ற முதல் தடகள வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

**➢ தேசிய விமான விளையாட்டுக் கொள்கை 2022 வரைவு**

- ✓ சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் ஜெனரல் டாக்டர் வி.கே. சிங் கருத்துப்படி, இந்தியாவில் விமான விளையாட்டுக்களை மேம்படுத்துவதற்காக தேசிய விமான விளையாட்டுக் கொள்கை வரைவை அரசு தயாரித்துள்ளது.
- ✓ இந்தக் கொள்கையின் கீழ், ஆத்மநிர்பர் பாரத் அபியானுக்கு ஏற்ப உள்நாட்டு வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் விமான விளையாட்டு உபகரணங்களின் உற்பத்தி ஆகியவை ஊக்குவிக்கப்படும்.

**➢ ஷகிபுல் கனி**

- ✓ பீகாரின் ஷகிபுல்கனி – பிப்ரவரி 18 அன்று கொல்கத்தாவில் தனது முதல் தர அறிமுகத்தில் மூன்று சதம் அடித்து வரலாறு படைத்துள்ளார்.
- ✓ இதன்மூலம், முதல்தர அறிமுகத்தில் முச்சதம் அடித்த உலகின் முதல் வீரர் என்ற பெருமையை கனி பெற்றார்.

**✓ சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் அமர்வு**

2023 சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் அமர்வை மும்பையில் நடத்தும் உரிமையை இந்தியா வென்றது.

அடுத்த ஆண்டு மே அல்லது ஜுன் மாதத்தில் நடைபெறும் இந்த அமர்வில், 2030 குளிர்கால ஒலிம்பிக் மற்றும் எல்ஏ 2028 ஒலிம்பிக் போட்டிகளுக்கான விளையாட்டு நிகழ்ச்சியை நடத்தும் நாட்டிற்கான தேர்தல் நடைபெறும்.

**➢ ஆர். பிரக்ஞானந்தா**

- ✓ இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆர். பிரக்ஞானந்தா – பிப்ரவரி 21 அன்று நடைபெற்ற ஆன்லைன் அதிவிரைவு செஸ் போட்டியான ஏர்திங்ஸ் மாஸ்டர்ஸின் எட்டாவது சுற்றில் உலகின் முதல்நிலை வீரரான மேக்னஸ் கார்ல்சனை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்.
- ✓ 2013இல் முதல் முறையாக உலக சாம்பியன் ஆனதிலிருந்து கார்ல்சனை 16வயதில் தோற்கடித்த இளைய வீரர் இவர் ஆவார்.

# இரங்கல் செய்திகள்

- **லதா மங்கேஷ்கர்**

✓ பழம்பெரும் பாடகி லதா மங்கேஷ்கர் பிப்ரவரி 6, 2022 அன்று காலமானார்.

✓ அவர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தி படங்களில் பாடல்களைப் பாடியுள்ளார். அத்துடன் முப்பத்தாறுக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் பாடியுள்ளார்.

✓ 'இந்தியாவின் நைட்டிங்கேல்' என்று செல்லப்பெயர் பெற்ற இந்தப் பாடகி, 2001இல் இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றார்.

✓ அவர் பத்ம விபூஷன் மற்றும் பத்ம பூஷன் விருதுகளையும் பெற்றுள்ளார்.

- **லக் மாண்டாக்னியர் (Luc Montagnier)**

✓ 2008ல் எச்.ஐ.வி-ஐ கண்டுபிடித்ததற்காக உன்னதமான பரிசை வென்ற பிரெஞ்சு ஆராய்ச்சியாளர் மற்றும் வைராலஜிஸ்ட் லூக்மாண்டாக்னியர் - பிப்ரவரி 8 அன்று தனது 89வயது வயதில் பாரிசில் உள்ள நியூலி-சுர்-சீனில் காலமானார்.

✓ 1982இல் எய்ட்ஸ் பற்றிய ஆய்வுகளில் அவரது ஈடுபாடு தொடங்கியது. அப்போது நோயைப் பரப்பும் ஒரு கிருமி ஒருவேளை வைரசாக இருக்கலாம், என்பது பற்றிய தகவல்கள் பரப்பப்பட்டன.

- **பிரவீன்குமார் சோப்தி**

✓ நடிகரும் தடகள வீரருமான பிரவீன் குமார் சோப்தி காலமானார்.

✓ 'மகாபாரதம்' என்ற தொலைக்காட்சித் தொடரில் பீமன் வேடம் பூண்டதற்காகவும், ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதற்காகவும் அவர் மிகவும் பிரபலமானார்.

✓ அவர் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 1966 மற்றும் 1970இல் இரண்டு தங்கப் பதக்கங்கள் உட்பட நான்கு பதக்கங்களை வென்றார்.

- **பிரணாப் தஸ்திதார்**

✓ மே 18, 1974 அன்று பொக்ரானில் இந்தியாவின் முதல் அணு ஆயுத சோதனையின் பொத்தானை அழுத்திய பிரணாப் தஸ்தோதர், சமீபத்தில் பிப்ரவரி 11 அன்று கலிபோர்னியாவில் காலமானார்.

✓ புகழ்பெற்ற விஞ்ஞானியான பிரணாப், இந்தியாவின் உள்நாட்டு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் அரிஹந்தின் உலை வளர்ச்சி மற்றும் வடிவமைப்பில் முக்கிய பங்காற்றினார்.

# அறிக்கைகள்

➢ **இந்தியாவின் வேலையின்மை விகிதம்**

✓ இந்தியாவின் வேலையின்மை விகிதம் ஜனவரி 2022இல் 6.57 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது மார்ச் 2021க்குப் பிறகு மிகக் குறைந்த அளவாகும் என்று இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy) தெரிவித்துள்ளது.

✓ இந்தியாவின் நகர்ப்புறங்களில் ஜனவரியில் வேலையின்மை 8.16 விழுக்காடாக இருந்தது. அதே நேரத்தில் இந்த விழுக்காடு கிராமப்புறங்களில் 5.84 ஆகக் குறைந்துள்ளது.

➢ **உலகின் மிகவும் நெரிசலான நகரங்கள் 2021**

✓ டிம் டாமின் நெரிசல் நகரங்கள் 2021 அட்டவணையின்படி (TomTom's Traffic Index), 2021ஆம் ஆண்டில் மும்பை உலகின் ஐந்தாவது மிகவும் நெரிசலான நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது.

✓ இந்தக் குறியீட்டில் பெங்களூரு 10வது இடத்திலும், புது டெல்லி 11வது இடத்திலும், புனே 21 வது இடத்திலும் உள்ளன.

✓ இஸ்தான்புல் உலகின் மிகவும் நெரிசலான நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோ உள்ளது.

➢ **தேசிய குற்றப் பதிவுப் பணியகம் (National Crime Records Bureau)**

✓ தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, சமீபத்தில் முதல் பெருந்தொற்று ஆண்டாகிய 2020ல், வேலையில்லாதவர்களிடையே அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன.

✓ தற்கொலைகளின் எண்ணிக்கை முதன்முறையாக 3000ஐ தாண்டியது. 3548 பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

➢ **குழந்தைகள் நலத் திட்டம்**

✓ மத்திய அமைச்சர் ஸ்மிருதி இராணி, 2014ஆம் ஆண்டிலிருந்து குழந்தைகளை மையமாகக் கொண்ட அரசின் திட்டத்திற்கு பட்ஜெட் ஒதுக்கீடுகளில் 390 விழுக்காடு அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

✓ 2013-14ல் 300 கோடியாக இருந்த மிஷன் வத்சலயா (குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பிற்கான ஒரு குடைத் திட்டம்) திட்ட ஒதுக்கீடு 2022-23ல் 1,472 கோடியாக அதிகரித்துள்ளதை ஒரு வரைபடம் காட்டுகிறது.

✓ மற்றொரு வரைபடம், சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 (குழந்தைகளின் ஊட்டச்சத்து மேம்பாட்டிற்கான குடைத் திட்டம்) திட்டத்திற்கு 14.48 விழுக்காடு அதிகரிப்பைக் காட்டியது. 2013-14ஆம் ஆண்டில் 17,700 கோடியாக இருந்த இந்த ஒதுக்கீடு அடுத்த நிதி ஆண்டில் 20,263 கோடியாக அதிகரிக்கப்பட்டது.

# தரவரிசைப் பட்டியல்

- **உலகளாவிய டிஜிட்டல் திறன்கள் அட்டவணை 2022 (Global Digital Skills Index 2022)**

✓ வாடிக்கையாளர் உறவு மேலாண்மையில் முன்னணி நிறுவனமாகிய சேல்ஸ் ஃபோர்ஸ், 2022ஆம் ஆண்டுக்கான உலகளாவிய டிஜிட்டல் திறன் குறியீட்டை வெளியிட்டுள்ளது.

✓ சேல்ஸ் ஃபோர்ஸ் உலகளாவிய டிஜிட்டல் திறன் அட்டவணை 2022ல் இந்தியா 100க்கு 66 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்தது.

✓ பிரேசில் மற்றும் தாய்லாந்து அணிகள் முறையே 53 மற்றும் 48 புள்ளிகளுடன் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன. இந்தக் குறியீடு உலகளாவிய ஊழியர்களின் உணர்வுகள் மற்றும் முக்கிய டிஜிட்டல் திறன்களைப் பெறுவதற்கான தயார்நிலையை அளவிடுகிறது.

- **பொருளாதார புலனாய்வுக் குறியீட்டின் ஜனநாயகக் குறியீடு**

✓ தி எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட்டின் கூற்றுப்படி, 2021 ஜனநாயகக் குறியீட்டின் உலகளாவிய தர வரிசையில் இந்தியா 46வது இடத்தைப் பிடித்துள்ளது.

✓ பொருளாதார புலனாய்வு 2021ஆம் ஆண்டு ஜனநாயகக் குறியீட்டில் 9.75 மதிப்பெண்களுடன் நார்வே முதலிடம் பிடித்தது.

✓ 6.91 மதிப்பெண் பெற்று இந்தப் பட்டியலில் இந்தியா 46வது இடத்தைப் பிடித்தது.

- **அமெரிக்க பசுமைக் கட்டிட கவுன்சில் (US Green Building Council)**

✓ 9வது அமெரிக்க பசுமை கட்டிட கவுன்சிலில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.

✓ 2021ஆம் ஆண்டில் எரிசக்தி மற்றும் சுற்றுச் சூழல் வடிவமைப்பில் தலைமைத்துவத்திற்கான அமெரிக்காவிற்கு வெளியே உள்ள முதல் 10 நாடுகளின் 95து வருடாந்திர தரவரிசையை அமெரிக்க பசுமை கட்டிட கவுன்சில் வெளியிட்டுள்ளது. இதில் இந்தியா 146 திட்டங்களுடன் 3வது இடத்தைப் பிடித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| பிப்ரவரி 2 | **உலக சதுப்பு நில நாள்** | 2022ஆம் ஆண்டு உலக சதுப்பு நில தினத்திற்கான சர்வதேச கருப்பொருள் 'மக்கள் மற்றும் இயற்கைக்கான சதுப்புநில நடவடிக்கை' என்பதாகும். |
| பிப்ரவரி 4 | **உலக புற்றுநோய் தினம்** | 2022-24 உலக புற்றுநோய் தினத்தின் கருப்பொருள், 'கவனிப்பு - இடைவெளியை மூடு' என்பதாகும். |
| பிப்ரவரி 4 | **மனித சகோதரத்திற்கான சர்வதேச தினம்** | பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் மதங்கள், அல்லது நம்பிக்கைகள் மற்றும் சகிப்புத் தன்மையை மேம்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| பிப்ரவரி 6 | **பெண் பிறப்புறுப்பு சிதைவுக்கான பூஜ்ஜிய சகிப்புத் தன்மையின் சர்வதேச தினம்** | 2022ஆம் ஆண்டுக்கான மையக் கருத்து, 'பெண் பிறப்புறுப்பு சிதைவை முடிவுக்குக் கொண்டு வருதற்கான முதலீட்டை துரிதப்படுத்துதல். |
| பிப்ரவரி 10 | **உலக பருப்பு வகைகள் தினம்** | இந்த ஆண்டு உலக பருப்பு தினத்தின் கருப்பொருள், 'நிலையான வேளாண் உணவு முறைகளை அடைவதில் இளைஞர்களை மேம்படுத்துவதற்கு பருப்பு வகைகள்' என்பதாகும். |
| பிப்ரவரி 10 | **தேசிய குடற்புழுநீக்க தினம்** | 1-19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்து பாலர் மற்றும் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்கத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இது அனுசரிக்கப்படுகிறது. |
| பிப்ரவரி 11 | **அறிவியலில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான சர்வதேச தினம்** | 2022ஆம் ஆண்டின் கருப்பொருள், 'சமநிலை, பன்முகத் தன்மை மற்றும் உள்ளடக்கம்: நீர் நம்மை ஒன்றிணைக்கிறது' என்பதாகும். |

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 12 | **டார்வின் தினம்** | சார்லஸ் டார்வினின் பிறந்த நாள் மற்றும் அறிவியல் மற்றும் மனித குலத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை நினைவு கூறும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. |
| பிப்ரவரி 12 | **தேசிய உற்பத்தித் திறன் தினம்** | 2022 தேசிய உற்பத்தித் திறன் வாரத்தின் கருப்பொருள் 'உற்பத்தித் திறன்மூலம் சுய சார்பு' என்பதாகும். |
| பிப்ரவரி 13 | **தேசிய பெண்கள் தினம்** | இந்தியாவின் நைட்டிங்கேல் சரோஜினி நாயுடுவின் பிறந்த நாளில் தேசிய மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. |
| பிப்ரவரி 13 | **உலக வானொலி தினம்** | 2022 உலக வானொலி தினத்திற்கான மையக் கருத்து, 'ரேடியோ மற்றும் நம்பிக்கை' 002E. |
| | | |
| பிப்ரவரி 14 | **சர்வதேச கால்-கை வலிப்பு தினம்** | சர்வதேச கால்-கை வலிப்பு தினம், கால்-கை வலிப்பு பற்றிய உண்மையான உண்மைகள் மற்றும் மேம்பட்ட சிகிச்சை, சிறந்த கவனிப்பு மற்றும் ஆராய்ச்சியில் அதிக முதலீடு ஆகியவற்றின் அவசரத் தேவை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கல்வி கற்பிக்கவும் முயல்கிறது. |
| பிப்ரவரி 18 | **புளூட்டோ தினம்** | 1930இல் புளூட்டோ கண்டுபிடிக்கப்பட்டதன் நினைவாக ஆண்டுதோறும் பிப்ரவரி 18 அன்று புளூட்டோ தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| பிப்ரவரி 20 | **உலக சமூக நீதி நாள்** | 2022ஆம் ஆண்டு மையக் கருத்து, "முறையான கல்வி மூலம் சமூக நீதியை அடைதல்' என்பதாகும். |
| பிப்ரவரி 21 | **சர்வதேச தாய்மொழி தினம்** | மையக் கருத்து 2022 – பன்மொழிக் கற்றலுக்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்: சவால்கள் மற்றும் வாய்ப்புகள் |
| பிப்ரவரி 22 | **உலக சிந்தனை நாள்** | 2022 உலக சிந்தனை நாள் மையக் கருத்து. 'நமது உலகம், நமது சமமான எதிர்காலம்' ஆகும். |
| பிப்ரவரி 27 | **தேசிய புரதம் தினம்** | 'உணவு எதிர்காலம்' என்பது 2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும். இது தேசிய அளவிலான பொது சுகாதார முன் முயற்சியான புரதத்திற்கான உரிமையால் அறிவிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 27 | **உலக என்ஜிஓ தினம்** | 2022ஆம் ஆண்டிற்கான மையக் கருத்து இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அதே சமயம், 2021ஆம் ஆண்டின் உலக அரசு சாரா தினத்தின் கருப்பொருள், ‘கொண்டாடுதல், நினைவுகூறுதல், ஒத்துழைத்தல், நன்கொடை’ என்பதாகும். |
| பிப்ரவரி 28 | **தேசிய அறிவியல் தினம்** | 2022ஆம் ஆண்டுக்கான மையக் கருத்து – ‘நிலையான எதிர்காலத்திற்கான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்த அணுகுமுறை’ ஆகும். |

APOLLO STUDY CENTRE